இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 204 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 22 – செவ்வாய்க்கிழமை 05 மார்ச் 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 204 : Thiruvalluvar Year - 2055 - Maasi 22 - Tuesday 05 March 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00




## ரூ,114.48 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள

# மயிலாடுதுறை புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**மயிலாடுதுறை, மார்ச் 5-**

**மயிலாடுதுறையில் புதியதாக ரூ.114.48 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து நல உதவிகள் வழங்கி சிறப்புரை யாற்றினார்.**

கழகத்தலைவர், முதல்வர்களுக்கு எல்லாம் முதல்வர், கடைக்கோடி மக்களும் அரசின் நல திட்டங்கள் சென்று அடையும் வகையில் சிறப்பான ஆட்சி செய்து வரும் திராவிட மாடல் அரசின் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மயிலாடுதுறை பால்பண்ணையில் மயிலாடு துறை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டிட ரூ.114.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார்.

அதுமட்டுமின்றி இக்கட்டிடம் கட்ட தன் திருக்கரங்களால் அடிக்கல்



நாட்டினார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

**பயனாளிகளுக்கு அரசு நலத்திட்டங்கள்!**

அடிக்கல் நாட்டிய ஓர் ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்பட்டு அக்கட்டிடத்தை நேற்று (4.3.2024) கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது திருக்கரத்தால் திறந்து வைத்து, சிறப்புரையாற்றினார்.

மேலும் மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களின் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிடும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவுற்ற திட்டப் பணிகளையும் நேற்று திறந்து வைத்தார். இம்மூன்று மாவட்டங்களுக்கும் அரசு நலத்திட்டங்களை பயனாளிகளுக்கு வழங்கி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை யாற்றினார்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

முன்னதாக இவ்விழாவில் பங்கேற்றிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை எழும்பூரிலிருந்து ரயில் மூலம் நேற்று முன்தினம் சீர்காழி சென்றார்.

இரவு 8.30 மணி அளவில் வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சீர்காழி ரயில் நிலையத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

**அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்!**

முன்னதாக மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திறக்கப்படுவதை முன்னிட்டு அக்கட்டிடத்தினை பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் நேரில் ஆய்வு மேற்கொண்டார். அதுபோது, அமைச்சர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

## 'இந்தியா' கூட்டணி ஆட்சிக்கு வந்ததும்,

# வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை!

## ராகுல் காந்தி உறுதி!

ஜெய்பூர், மார்ச் 5-

நாட்டின் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ராகுல் காந்தி 'இந்திய ஒற்றுமை நீதி நடைப்பயணம்' மேற்கொண்டு வருகிறார். ராஜஸ்தானில் தனது நடைப்பயணத்தை நேற்று முன்தினம் நிறைவு செய்த அவர், மத்திய பிரதேசத்தில் தனது பயணத்தை தொடர்ந்தார்.

அங்குள்ள குவாலியர் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர்,

நாட்டின் மக்கள்தொகையில் பாதி பேரிடம் உள்ள செல்வத்துக்கு நிகரான செல்வம் 22 பணக்காரர்களிடம் மட்டும் உள்ளதாகவும், இதில் 60 சதவீத பணம் 5 சதவீத பணக்காரர்களிடம் மட்டும் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் உச்ச நிலையை எட்டியுள்ளதாகத் தெரிவித்த அவர், பாகிஸ்தான், வங்கதேசத்தில் உள்ளதை விட இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் இரட்டிப்பாக உள்ளதாகவும் கூறினார். பத்து முதல் பதினைந்து தொழிலதிபர்களின் 16 லட்சம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்துள்ள ஒன்றிய அரசு, பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டபூர்வ உத்தரவாதம் அளிக்க மறுப்பது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்ததும், குறைந்தபட்ச ஆதரவு விலை சட்டம் நிறைவேற்றப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். பாதுகாப்புப் படைகளுக்கு ஆள்சேர்க்க 'அக்னிபத்' திட்டத்தை மோடி அரசு அமல்படுத்தியுள்ளது. அந்தத் திட்டத்தின் கீழ் பணியில் சேர்வோர் நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்தால், அவர்கள் தியாகி என்றழைக்கப்பட மாட்டார்கள். அத்துடன் அந்தத் திட்டத்தால் பாதுகாப்புப் படைகளில் பணியாற்றி ஓய்வுபெறும் நான்கில் மூன்று பேருக்கு ஓய்வூதியம் கிடைக்காது என்றும் ராகுல் காந்தி கூறினார்.

## 5 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து!

# நலமான குழந்தைகளே வளமான எதிர்காலத்திற்கான ஒளி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மார்ச் 5 -**

**5 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. இது குறித்து முதல்வர் அவர்கள் சமூக வலை தளப் பதிவில் நலமான குழந்தைகளே வளமான எதிர்காலத்திற்கான ஒளி!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

தமிழ்நாடு முழுவதும் நேற்று முன்தினம் (3.3.2024) போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடைபெற்றது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள், முக்கிய இடங்கள் என மொத்தம் 43,051 மையங்களில் இம்முகாம்கள் நடைபெற்றன.

பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், சோதனைச் சாவடிகள், விமான நிலையங்களிலும் சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

இந்த சொட்டு மருந்து முகாம்களில் 5 வயதுக்குட்பட்ட 57.84 இலட்சம் குழந்தைகள் அனைவருக்கும் சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

முன்னதாக நேற்று முன்தினம் காலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில், குறிப்பிட்டிருப்பதாவது:-

**"அன்பார்ந்த பெற்றோர்களே ஓர் வேண்டுகோள்!**

**போலியோ இல்லாச் சமுதாயம் தொடர, இன்றைய போலியோ சொட்டு மருந்து முகாம்களில் 5 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் தவறாமல் சொட்டு மருந்து வழங்குங்கள்...**

**நலமான குழந்தைகளே வளமான எதிர்காலத்திற்கான ஒளி!"**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# பாட்னாவில் "இந்தியா" கூட்டணியின் பொதுக்கூட்டம்!

## ராகுல் காந்தி, லாலு பிரசாத் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்பு!

பாட்னா, மார்ச் 5 –

பீகார் தலைநகர் பாட்னாவில் இந்தியா கூட்டணியின் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ராகுல் காந்தி – லாலு பிரசாத் யாதவ் – தலைவர்கள் பங்கேற்றனர்.

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிராக "இந்தியா எனும் பெயரில் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியா கூட்டணியில் காங்கிரஸ், தி.மு.க., சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ், உத்தவ் தாக்கரேவின் சிவசேனா, ஆம் ஆத்மி, சமாஜ்வாதி, இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இக்கூட்டணியில், டெல்லி உள்ளிட்ட 5 மாநிலங்களில் ஆம் ஆத்மி கட்சி, காங்கிரஸ் இடையே வெற்றிகரமாக தொகுதி உடன்பாடு அறிவிக்கப்பட்டது.

இதேபோல உத்தரப்பிரதேசத்திலும் சமாஜ்வாதி கட்சி காங்கிரஸ் இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் தி.மு.க. காங்கிரஸ் இடையே தொடர்ந்து தொகுதி பங்கீட்டு பேச்சு வார்த்தை சுமூகமாக நடைபெற்று வருகிறது.

ஜம்மு காஷ்மீரிலும் தேசிய மாநாட்டு கட்சி மக்கள் ஜனநாயகக் கட்சி காங்கிரஸ் இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டது.

48 லோக்சபா தொகுதிகளைக் கொண்ட மகாராஷ்டிராவிலும் "இந்தியா கூட்டணி கட்சிகளிடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பீகார் தலைநகர் பாட்னாவில் இந்தியா கூட்டணியின் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி, பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் டி.ராஜா உள்ளிட்டவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பித்தனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# கழக வேட்பாளராக போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்!

## பொதுச்செயலாளர் **துரைமுருகன்** அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோருக்கான விண்ணப்பப் படிவங்கள் வருகிற 19-2-2024 முதல் அண்ணா அறிவாலயத்திலுள்ள தலைமைக் கழகத்தில் கிடைக்கும்.

**போட்டியிட விரும்புகின்ற கழகத் தோழர்கள் விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து, 1-3-2024 முதல் 7-3-2024 மாலை 6 மணிக்குள் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**வேட்பாளர் விண்ணப்பக் கட்டணம் - ரூ.50,000/-**

(விண்ணப்பப் படிவத்தை தலைமைக் கழகத்தில் ரூ.2,000/-வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.)

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 15-2-2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 05-03-2024

# எந்தத் திட்டத்துக்கு தடை போட்டோம்? - 1

**தமிழ்நாட்டுக்கு திட்டங்களுக்கு மேல் திட்டங்களை கொண்டு வந்து திணித்தது போலவும் அதற்கு தமிழ்நாடு அரசு ஒத்துழைக்கவில்லை என்பதைப் போலவும் பிரதமர் மோடி திருநெல்வேலியில் பேசி இருக்கிறார். "எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார். எதற்கு நாங்கள் தடையாக இருந்தோம்" என்று கேட்டுள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதற்கு இதுவரை பதில் இல்லை. அவர்கள் அறிவித்த திட்டத்துக்கு அவர்களே தடையாக இருக்கிறார்கள் என்பது தான் உண்மை.**

**1. மதுரை எய்ம்ஸ்**

'தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்யுங்கள்' என்று முதன்முதலாக 19.6.2014 அன்று தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு கடிதம் அனுப்பியது. இரண்டு இடங்களைத் தேர்வு செய்து 31.0.2014 அன்று தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியது.28.2.2015 அன்று ஒன்றிய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த நிதியமைச்சர் அருண் ஜெட்லி, 'மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமையும்' என்று சொன்னார். 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மதுரை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைய நான்கு மாத காலக்கெடுவை நீதிமன்றம் விதித்தது.

2018 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதி எய்ம்ஸ் மருத்துவ மனைக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுவார் என்று தேதியே குறித்தார்கள். அடிக்கல் நாட்டப்படவில்லை. 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வந்ததால், 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் தேதி அடிக்கல் நாட்டினார் பிரதமர்.

மாநில அரசிடமிருந்து 224.24 ஏக்கர் நிலம் ஒன்றிய அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. திட்ட மதிப்பீடு ஆயிரத்து 977 கோடி ரூபாயாக அதிகரித்த நிலையில், ஓராண்டு கழித்து ஜப்பான் நிறுவனத்திடம் இருந்து கடன் பெறும் ஒப்பந்தம் கையெழுத்தானது. 82 சதவீதம் நிதியான ஆயிரத்து 627 கோடி ரூபாய் ஜப்பானின் ஜைய்கா நிறுவனத்திடம் இருந்து கடன் பெறப்படும். எஞ்சிய 18 சதவிகிதம் மட்டுமே ஒன்றிய அரசு வழங்கும் என கூறப்பட்டது. மற்ற மாநிலங்களில் அமைக்கும் மருத்துவமனைகள் எல்லாம் பா.ஜ.க. அரசின் நிதியில் இருந்து அமைக்கப்பட, தமிழ்நாட்டுக்கு மட்டும் அந்நிய நாட்டின் நிதியை எதிர்பார்த்தார்கள். **இப்போது ராமநாதபுரத்தில் வாடகை கட்டடத்தில் இருக்கிறது எய்ம்ஸ். மதுரையில் ஒரு வாடகை கட்டடம் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இதுதான் பிரதமரின் எய்ம்ஸ் திட்டத்தின் லட்சணம் ஆகும்.**

**2. சென்னை மெட்ரோ**

8.4.2023 அன்று பல்லாவரத்தில் நடந்த விழாவில் பிரதமர் முன்னிலையில் பேசும் போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "சென்னையில் செயல்படுத்தப்பட்டு வரும் மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளுக்கான ஒன்றிய அரசின் பங்கினை வழங்குவதற்கான ஒப்புதல் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒன்றிய அரசில் நிலுவையில் உள்ளது" என்றார். அதற்கு பிரதமரின் பதில் என்ன?

சென்னையில் 2ஆம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி அளிக்காததால், நிதி கிடைக்கவில்லை. இதனால் திட்டப்பணிகள் நடைபெறுவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசும் இணைந்து கூட்டு முயற்சி அடிப்படையில், 50:50 என்ற சமபங்கு வீதத்தில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் முதற்கட்டப் பணிகள் வெற்றிகரமாக செயல்படுத்தப் பட்டன. இதனடிப்படையில், 63,246 கோடி ரூபாய் செலவில், 119 கிலோமீட்டர் நீளமுள்ள மேலும் மூன்று வழித் தடங்களைக் கொண்ட 2ம் கட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2019 ஜனவரி மாதத்தில் ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டது.

ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் மற்றும் நிதி ஆயோக் ஆகியவற்றின் பரிந்துரையுடன், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி ஒப்புதல்களும் இறுதி செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. இதற்குப் பிறகு, ஒன்றிய உள்துறை அமைச்சர் 21.11.2020 அன்று சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். ஆனால் இதுவரை ஒன்றிய அரசு திட்ட அனுமதியைத் தரவில்லை. பிரதமரை பல்முறை நேரில் சந்தித்தும் முதலமைச்சர் அவர்கள் இது பற்றி விளக்கி இருக்கிறார். ஆனாலும் அனுமதி கிடைக்கவில்லை.

இந்தத் திட்டத்திற்கான முன் மொழிவு பொருளாதார விவகாரங் களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதலுக்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் காத்திருக்கிறோம். இரண்டாம் கட்ட பணிகளை தமிழ்நாடு அரசு தனியாகத் தொடங்கி இருக்கிறது. பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதல் இல்லாத நிலையில், ஒன்றிய அரசின் பங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், மாநில நிதியில் இருந்து செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது பணிகளின் வேகத்தைக் குறைத்துள்ளதோடு, மாநில அரசுக்குக் கடுமையான நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

**ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடியை தமிழ்நாடு அரசு மட்டும் செலவு செய்தாக வேண்டிய நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கு யார் காரணம்? பிரதமர் மோடி தான். ஒன்றிய அரசின் திட்டத்துக்கு நாம் தடையாக இல்லை. ஒன்றிய அரசின் திட்டத்தையே நாம் தான் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.**

**- தொடரும்**

## ஆர்.கே.நகர் தொகுதியில் அ.தி.மு.க.வினர் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

சென்னை, மார்ச் 5 -
ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. வட சென்னை மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி அவைத் தலைவர் ஆர்.ராஜா, வட சென்னை மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் ஆர்.பத்மா, முன்னாள் அம்மா பேரவைச் செயலாளர் த.ஏழுமலை, மகளிர் அணியைச் சேர்ந்த ஆர்.சரஸ்வதி, சங்கரி, அ.ம.மு.க.வைச் சேர்ந்த மரிய சூசை ஆகியோர் தலைமையில் 50க்கு மேற்பட்ட நபர்கள் அ.தி.மு.க.விலிருந்து விலகி, தங்களை திராவிட முன்னேற்ற கழகத்தில் சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர் ஆகியோர் முன்னிலையில் இணைத்துக் கொண்டனர்.

கழகத்தில் இணைந்தவர்களை மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஆகியோர் சால்வை அணிவித்து வரவேற்றனர்.

இந்நிகழ்வில் ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர்கள் இரா. லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், ஆர்.வெற்றிவீரன், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், பகுதி நிர்வாகிகள் என்.அனிபா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி 57 அ வட்டத்தில் கன்னிகா பரமேஸ்வரி கல்லூரி வளாகத்தில் மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா பொதுக்குழு உறுப்பினர் இரா.கலைச்செல்வி தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் "உயிரை சுமக்கும் உயிர்கள்! உதவும் தலைவர் கரங்கள்!" 185 நிறைமாத கர்ப்பிணிகளுக்கு வளைகாப்பும், நலத்திட்ட உதவிகளும், 140 மாணவிகளுக்கு தையல் இயந்திரம், 89 மாணவிகளுக்கு மடிக்கணினிகளையும் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், மண்டல குழு தலைவர்கள் பி.ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார் மற்றும் சுதாதீனதயாளன், ராஜேஷ்வரி ஸ்ரீதர், சாவித்திரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சிவகுமார் தலைமை! வி.பி.கருணாகரன் - அப்பு (எ) கருணாநிதி முன்னிலை! சோம.குணநிதி வரவேற்புரை!

## திருச்சி - திருவெறும்பூர் பகுதியில் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

### அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - டாக்டர் பா.மதிவேந்தன் சிறப்புரை!

திருச்சி, மார்ச் 5-
முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தெற்கு மாவட்டம் முழுவதும் பல்வேறு பொதுக்கூட்டங்கள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் திருச்சி தெற்கு மாவட்டத்தின் சார்பில் திருவெறும்பூர் பகுதி கிழக்கு மாநகரத்தின் சார்பில் 90 வது விழாவாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் தமிழக நிதி நிலை அறிக்கை பொதுக் கூட்டம் திருவெறும்பூர் ஆஞ்சநேயர் கோவில் அருகே நடைபெற்றது.

கூட்டத்திற்கு முன்னதாக திருவெறும்பூர் பகுதியில் இருவர்ண கொடியேற்றி கல்வெட்டை அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பா.மதிவேந்தன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

மேலும் இந்த விளக்க பொதுக் கூட்டத்திற்கு திருவெறும்பூர் பகுதி கழக செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான சிவகுமார் தலைமை வகித்தார், வட்டச் செயலாளர்கள் வி.பி.கருணாகரன் மற்றும் அப்பு என்கின்ற கருணாநிதி முன்னிலை வகித்தனர். வட்டக் கழகச் செயலாளர் சோம.குணநிதி வரவேற்புரை ஆற்றினார்.

மேலும் இந்த பொதுக் கூட்டத்தில் திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், தமிழக பள்ளித் துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் வனத்துறை அமைச்சர் மதிவேந்தன், திருச்சி கிழக்கு மாநகரச் செயலாளர் மண்டலம் 3ன் தலைவருமான மதிவாணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்தபொதுக் கூட்டத்தில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் பேசியதாவது:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவிற்கு வருகை புரிந்து இருக்கும் வனத் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் மதிவேந்தன் அவர்களை வரவேற்பதாகவும் அவர் முதன் முதலில் சட்டப்பேரவையில் ஆற்றிய கன்னிப் பேச்சை இன்று வரை யாராலும் மறக்க முடியாது என்றும் மேலும் மத்தியில் ஆளும் பாசிச பா.ஜ.க. ஆனது சொல்வது என்னவென்றால் நாங்கள் இந்த சாதியை குடியரசுத் தலைவர் ஆக்கி இருக்கிறோம், இந்த சாதியை மத்திய அமைச்சர் ஆக்கி இருக்கிறோம் என்று சாதியினை வைத்து ஒரு நபரை மட்டும் குறிப்பிட்டு அரசியல் நடத்தும் பா.ஜ.க.வினர் முன்பு இந்த நிகழ்ச்சிக்கு காரணமான அனைவராலும் போற்றப்படும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அனைவரும் சமம் என்று அனைத்து சாதியினருக்கும் இடஒதுக்கீடு வாங்கி தந்தவர் அவர்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்றும் ஆகவே இந்த நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதில் நாம் பெருமைப்படுவதாகவும் தமிழ்நாட்டில் நான் எந்த கூட்டத்தில் பேசினாலும் திருவெறும்பூரில் தான் பேசும் பொழுது குடும்பத்தினர் முன்பு பேசும் உணர்வு இருக்கிறது என்றும் திருவெறும்பூர் தொகுதி மக்களுக்கு என்றுமே அவர்கள் குடும்பத்தில் நான் மூத்த பிள்ளை என்றும் கடந்த சில நாட்களுக்கு முன்பு சுங்கச்சாவடி அகற்ற வேண்டும் என சட்டமன்றத்தில் பொதுப் பணித்துறை அமைச்சரிடம் எடுத்துரைத்ததாகவும் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரிடம் முதல்வர் அவர்கள் வாருங்கள் நாம் சேர்ந்து மத்திய அரசிடம் நமது மாநிலத்திற்கான நிதியை கேட்போம் என்று கூறினால் அதற்கு அவர் மறுப்பதாகவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கன்னி பேச்சை எம்.ஜி.ஆர். ஆர்வமாக கேட்பார் என்றும் ஆனால் இன்று இருக்கின்ற எதிர்க்கட்சியினர் மத்தியிலாளும் பா.ஜ.க.வுடன் கொல்லைபுரம் கூட்டணி அமைத்து தமிழக மக்களை வஞ்சித்து வருவதாகவும் எனவே வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்று நமது ஜனநாயகத்தை காக்க வேண்டும் எனவும் எடுத்துரைத்தார்.

வட்டச் செயலாளர் குமார் நன்றி உரையாற்றினார்.

மேலும் கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சேகரன், வண்ணை அரங்கநாதன், துணை மேயர் திவ்யா, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், செங்குட்டுவன், மூக்கன், லீலாவேலு, சந்திரமோகன், நூர்கான், சரோஜினி, பகுதிச் செயலாளர்கள் தர்மராஜ், நீலமேகம், ராஜ்முகம் மது, மணிவேல், மோகன், விஜயகுமார், பாபு ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ். எம்.கருணாநிதி, கங்காதரன், கூத்தைப்பார் பேரூர்ச் செயலாளர் தங்கவேலு மற்றும் மாவட்ட, பகுதி, நகர, கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், திராவிட மாடல் அரசின் சாதனைகள், அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் கோவை நா.கார்த்திக் தலைமையில் மார்க்கெட் எம்.மனோகரன் வரவேற்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றினார். இதில் கணபதி ராஜ்குமார், கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

### கவிச்சுடர் கவிதைப்பித்தன் பங்கேற்பு! புதுக்கோட்டை - அரசு ராணியார் மருத்துவமனையில்

# மார்ச் 1-ந் தேதி பிறந்த 12 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் !

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்!

புதுக்கோட்டை, மார்ச் 5-

கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு மார்ச் 01 அன்று புதுக்கோட்டை அரசு ராணியார் மருத்துவமனையில் பிறந்த 12 குழந்தைகளுக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் தலைமையில், சட்டத்துறை அமைச்சர், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ரகுபதி தங்க மோதிரம் அணிவித்து துவங்கி வைத்து சிறப்பித்தார்கள்.

நிகழ்வில் கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப் பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, நகர செயலாளர் ஆ.செந்தில், மாவட்டத் துணைச் செயலாளர்கள் எஸ்.எஸ். கருப்பையா, க.மதியழகன், மாவட்ட பொருளாளர் எம்.லியாகத் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கீரை தமிழ் ராஜா, சுப.சரவணன், ஒன்றிய செயலாளர் தவ.பாஞ்சாலன், பொதுக்குழு உறுப்பினர் சி.ஆர்.வி.சித்ரா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன்,

மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், எம்.எம். பாலு, செந்தாமரை பாலு, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், சி.அரங்கநாயகம், வி.ஜி. ஆர்.மணிவண்ணன், பொன்.பாரி, மு.கலைஞர் கருணாநிதி, பெ.தெய்வானை, கை.பழனிச்சாமி, கவிஞர் ஆ.மரிய எட்வின், செ.ரமேஷ், ராஜேந்திரன், பிரபு கேண்டீன் பன்னீர் செல்வம், டி.அப்புக்காளை, பால்ராஜ், அற்புத ஹென்றி, வீரக்குமார், எழில் ராஜா, நகர கழக நிர்வாகிகள் அ. ரெத்தினம், ப.ரெங்கராஜன், ராமச்சந்திரன்,

மாலையீடு பிரபு, விஜயக்குமார் உள்ளிட்ட வட்ட கழக நிர்வாகிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கழக தலைவர் - முதல்வர் பிறந்த நாள்

# திருவாரூரில் ஆயிரம் பேருக்கு அன்னதானம்!

## புலிவலம் ஏ.தேவா தலைமையில் மக்கள் கார்த்தி வழங்கினார் !

திருவாரூர், மார்ச் 05 -

கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவாரூர் ஒன்றிய கழகம் சார்பில் ஒன்றிய செயலாளரும் ஒன்றிய பெருந்தலைவருமான புலிவலம் ஏ.தேவா ஏற்பாட்டில் ஏழை எளிய ஆதரவற்றோர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. புலிவலம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் மக்கள் கார்த்தியால் ஆயிரம் பேருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளோடு, தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்தும் திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா தமிழ்நாடெங்கும் இளைஞர் எழுச்சி நாளாக எழுச்சியோடு கொண்டாடப்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டக்கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்களின் ஆலோசனைகளின் படி திருவாரூர் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு, கிளை கழகங்கள்தோறும் முதல்வர் தளபதி அவர்களின் பிறந்த இளைஞர் எழுச்சி நாள் விழா சிறப்போடு நடைபெற்றது.

திருவாரூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றியக் கழக செயலாளரும் ஒன்றிய பெருந்தலைவருமான புலிவலம். ஏ.தேவா தலைமையில் கழகக் கொடி ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. தொடர்ந்து ஏழை, எளிய ஆதரவற்ற மக்களுக்கு தையல் இயந்திரங்கள், மாணவ - மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக புலிவலம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் மக்கள் கார்த்தி முதல்வர் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக புலிவலம் பகுதியில் நாள் முழுவதும் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியையும் புலிவலம் ஏ.தேவா தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச்செயலாளர் செந்தில் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர் இக்பால் ஊராட்சி மன்ற தலைவர் காளிமுத்து உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், தம்பி செந்தில், சி.கே.எழிலரசன், புருஷோத், வெங்கடேஷ் உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புக்கள், பொதுமக்கள் எனபெருந்திரளானோர் பங்கேற்றனர்.

திருவாரூர் நகர கழகம் சார்பில் நடைபெற்ற இளைஞர் எழுச்சிநாள் விழாவில் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் எதிரில் தி.மு.க. நகர செயலாளர் வாரை பிரகாஷ் ஏற்பாட்டில் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கியும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது.

தொடர்ந்து ஏழை எளிய ஆதரவற்ற மக்களுக்கு நகர் மன்ற தலைவர் புவனபிரியா செந்தில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இலவச வேட்டி, சேலைகள் மரக்கன்றுகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினர். பின்னர் திருவாரூர் விஜயபுரம் அரசு தாய் சேய் நல மருத்துவமனையில் மார்ச் 1 பிறந்த குழந்தைகளுக்கு பழங்கள் பிஸ்கட் மற்றும் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் உபகரணங்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கினர்.

இந்த நிகழ்வில் நகர் மன்ற உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், எஸ்.என்.அசோகன், வரதராஜன், ரஜினி சின்னா, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ராஜ் என்கிற கருணாநிதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொது மக்கள் பங்கேற்றனர்.

# வேளச்சேரி 175 அ வட்டத்தில் முதல்வர் பிறந்த நாள் விழா!

சென்னை, மார்ச் 5-

வேளச்சேரி மேறகுப் பகுதி 175 அ வட்டம் மோகனபுரி 1வது தெருவில் தமிழக முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு வட்ட கழக செயலாளர் வி.சக்திவேல் தலைமையில் தொ.மு.ச பகுதி அமைப்பாளர் ஆர்.குணசேகரன் ஏற்பாட்டில் வேளச்சேரி மேற்கு பகுதி செயலாளர் அரிமா. சு.சேகர் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி ஜெ.சீதாபதி, அவைத்தலைவர் ஆர். ரமேஷ், துணை செயலாளர்கள் என்.முருகன், எல். அலெக்ஸ்செல்வமணி, எம். ஆனந்தஜோதி, வட்ட பொருளாளர் வி.வேல்முருகன், பகுதி பிரதிநிதிகள் ஆர்.நாராயணன், எஸ். பாலாஜி, பெ.கண்ணன், பா.மோகன்ராஜ், மாவட்ட துணை அமைப்பாளர் ப.நடராஜன், சி.எம்.பிரபு, வட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஏ.தேவசகாயம், நா.விஜய குமார், எஸ்.செல்வம், ஏ.அசோக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதிக்கு தேர்தலில் போட்டியிட சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் விருப்ப மனுவை அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியிடம் வழங்கினார். அப்போது மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# திருப்பத்தூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் - முதல்வர் பிறந்தநாள் விழா ! 100 தொடர் தெருமுனைக் கூட்டங்கள்!

## திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ அறிவிப்பு!



**திருப்பத்தூர் மாவட்டத்தின் சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களின் 71வது பிறந்தநாள் விழாவை கொண்டாடும் வகையில் மாவட்டம் முழுவதும், 100 தொடர் தெருமுனை கூட்டங்கள், கழக கொடியேற்றி, பொது மக்களுக்கு இனிப்பு வழங்குதல் மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு நல உதவிகள், மருத்துவ முகாம்கள், ஆதரவற்ற ஏழை, முதியோர், சிறுவர் இல்லங்கள், காப்பகங்களில் உணவளித்தல் என தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. எனவே திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட அணிகளின் அனைத்து அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், BLA2, BLC, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் இந்நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்து கொண்டு அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பித்திட வேண்டுகிறேன்.**

| வ.எண் | தேதி | சிறப்பு பேச்சாளர் | நடைபெறும் இடம் | நிகழ்ச்சி ஏற்பாடு |
|---|---|---|---|---|
| 1 | 5/3/2028 | எழும்பூர் மோ.கோபிநாதன் | எலவம்பட்டி | கந்திலி மத்திய ஒன்றியம் |
| 2 | | | ஆதியூர் | |
| 3 | | | கொரட்டி | |
| 4 | | | தோரணம்பதி | |
| 5 | | | செவ்வாத்தூர் | |
| 6 | | | நத்தம் | |
| 7 | | | குனிச்சி | |
| 8 | | ஆடுதுறை உத்திராபதி | சந்திரபுரம் | ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் |
| 9 | | | மல்லபள்ளி | |
| 10 | | | வேட்டப்பட்டு | |
| 11 | | | அக்ராகரம் | |
| 12 | | | திரியாலம் | |
| 13 | | | அம்மணாங்கோவில் | |
| 14 | | பாரதிதாசன் | 5–வது வார்டு | ஆலங்காயம் பேரூர் |
| 15 | | | 6–வது வார்டு | |
| 16 | | | 9–வது வார்டு | |
| 17 | | | 10–வது வார்டு | |
| 18 | | | 11–வது வார்டு | |
| 19 | | வண்ணை புகாரி | மாதனூர் | மாதனூர் கிழக்கு ஒன்றியம் |
| 20 | | | கீழ்முருங்கை | |
| 21 | | | விண்ணமங்கலம் | |
| 22 | | | பெரியாங்குப்பம் | |
| 23 | | | மின்னூர் | |
| 24 | | தமிழ் பிரியன் | 4–வது வார்டு | உதயேந்திரம் பேரூர் |
| 25 | | | 5–வது வார்டு | |
| 26 | | | 9–வது வார்டு | |
| 27 | | | 11–வது வார்டு | |
| 28 | | | 15–வது வார்டு | |
| 29 | 6/3/2024 | எழும்பூர் மோ.கோபிநாதன் | கசிநாயக்கன்பட்டி | கந்திலி கிழக்கு ஒன்றியம் |
| 30 | | | சு.பள்ளிப்பட்டு | |
| 31 | | | ப.முத்தம்பட்டி | |
| 32 | | | விசமங்கலம் | |
| 33 | | | சிம்மணபுதூர் | |
| 34 | | தூத்துக்குடி சரத்பாலா | செட்டியப்பனூர் | ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் |
| 35 | | | மண்டலவாடி | |
| 36 | | | பொன்னேரி | |
| 37 | | | பெத்தகல்லுபள்ளி | |
| 38 | | | சின்னகம்மியம்பட்டு | |
| 39 | | காவேரிப்பட்டணம் இளையராஜா | தும்பேரி | நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் |
| 40 | | | சிக்கணாங்குப்பம் | |
| 41 | | | அம்பலூர் | |
| 42 | | | திம்மாம்பேட்டை | |
| 43 | | | மல்லகுண்டா | |
| 44 | | திருப்பத்தூர் மேகநாதன் | கைலாசகிரி | மாதனூர் மத்தியம் ஒன்றியம் |
| 45 | | | சின்னவரிகம் | |
| 46 | | | பெரியவரிகம் | |
| 47 | | | துத்திப்பட்டு | |
| 48 | | | தேவலாபுரம் | |
| 49 | 7/3/2024 | பிரம்மபுரம் பழனி | காக்கங்கரை | கந்திலி மேற்கு ஒன்றியம் |
| 50 | | | எர்ரம்பட்டி | |
| 51 | | | பரதேசிப்பட்டி | |
| 52 | | | மோட்டூர் | |
| 53 | | | கும்மிடிகாம்பட்டி | |
| 54 | | ஆம்பூர் தர்மன் | ஆண்டியப்பனூர் | திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் |
| 55 | | | குரிசிலாப்பட்டு | |
| 56 | | | பெருமாபட்டு | |
| 57 | | | பால்னாங்குப்பம் | |
| 58 | | | அண்ணாண்டப்பட்டி | |
| 59 | | சேலம் சுஜாதா | பாச்சல் | ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம் |
| 60 | | | தாமலேரிமுத்தூர் | |
| 61 | | | கட்டேரி | |
| 62 | | | ஏலகிரி கிராமம் | |
| 63 | | | புத்தகரம் | |
| 64 | | குடியாத்தம் பாரி | மதனாஞ்சேரி | ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் |
| 65 | | | ஜாப்ராபாத் | |
| 66 | | | ஈச்சங்கால் | |
| 67 | | | வெலதிகாமணிபெண்டா | |
| 68 | | | இளையநகரம் | |
| 69 | | ஆரூர் மணிவண்ணன் | 1–வது வார்டு | நாட்றம்பள்ளி பேரூர் |
| 70 | | | 3–வது வார்டு | |
| 71 | | | 6–வது வார்டு | |
| 72 | | | 9–வது வார்டு | |
| 73 | | | 11–வது வார்டு | |
| 74 | 8/3/2024 | கரூர் முரளி | புதுக்கோட்டை | திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் |
| 75 | | | செலந்தம்பள்ளி | |
| 76 | | | கோனேரிக்குப்பம் | |
| 77 | | | இராச்சமங்கலம் | |
| 78 | | | களரூர் | |
| 79 | | சேலம் சுஜாதா | அரங்கல்துருகம் | மாதனூர் மேற்கு ஒன்றியம் |
| 80 | | | மேல்குப்பம் | |
| 81 | | | வீராங்குப்பம் | |
| 82 | | | மிட்டாளம் | |
| 83 | | | பாப்பனப்பள்ளி | |
| 84 | | கென்னடி | கந்திலி | கந்திலி தெற்கு ஒன்றியம் |
| 85 | | | தோக்கியம் | |
| 86 | | | பெரியகரம் | |
| 87 | | | கதிரிமங்கலம் | |
| 88 | | | அச்சமங்கலம் | |
| 89 | | கந்திலி கரிகாலன் | கொத்தூர் | நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம் |
| 90 | | | பச்சூர் | |
| 91 | | | கே. பந்தாரப்பள்ளி | |
| 92 | | | ஆத்தூர்குப்பம் | |
| 93 | | | நாயனசெருவு | |
| 94 | | குடியாத்தம் பாரி | நாயக்கனூர் | ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம் |
| 95 | | | மரிமானிகுப்பம் | |
| 96 | | | மிட்டூர் | |
| 97 | | | நிம்மியம்பட்டு | |
| 98 | | | கொத்தக்கோட்டை | |
| 99 | | | வளையாம்பட்டு | |
| 100 | | | வெள்ளக்குட்டை | |

**க.தேவராஜி எம்.எல்.ஏ.**

செயலாளர் - திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.

## தமிழ்நாட்டுக்கு எந்த நிதியையும் ஒதுக்காத ஒன்றிய அரசுக்குப் பாடம் புகட்டிட

# நாற்பதுக்கும் நாற்பதை முதல்வரின் கரங்களில் ஒப்படைப்போம்!

## தஞ்சை பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., உரை!

**தஞ்சை, மார்ச் 5 -**

**“தமிழ்நாட்டுக்கு எந்த நிதியையும் ஒதுக்காத ஒன்றிய அரசுக்குப் பாடம் புகட்டிட நாற்பதுக்கும் நாற்பதையும் கழகத் தலைவர் முதல்வர் தளபதியின் கரங்களில் ஒப்படைப்போம்” என்று கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்றக் கழகக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. தஞ்சை பொதுக்கூட்டத்தில் பேசும் போது கூறினார்.**

மார்ச் 2 ஆம் தேதி (02-03-2024 சனிக்கிழமை) தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தஞ்சாவூர் ஆப்ரஹாம் பண்டிதர் சாலையில் நடைபெற்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழா, தமிழ்நாடு அரசின் மூன்று ஆண்டு சாதனைகள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு: -

“தமிழ்நாடு முதல்வர் அண்ணன் தளபதி அவர்களின் 71 ஆவது பிறந்த நாள், தமிழக அரசின் சாதனைகள், நிதிநிலை அறிக்கை விளக்கக் கூட்டம் என முப்பெரும் விழாவாக இந்த தஞ்சையிலே இந்த கூட்டத்திலே கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

### தந்தை வீட்டுக்கு வந்த மகளின் மகிழ்ச்சி தஞ்சையில்!

ஒரு மகளுக்கு தந்தை வீட்டுக்கு வருவது போல மகிழ்ச்சி தருவது வேறு எதுவும் கிடையாது. இந்த மண்ணிலே காலடி வைக்கும் ஒவ்வொரு நாளும் மன நிறைவை மகிழ்ச்சியை உற்சாகத்தை தரக்கூடிய நாளாகத்தான் இருந்திருக்கிறது. இன்று என் தந்தையுடைய மண்ணிலே பொதுக் கூட்டத்திலே கலந்துகொள்வது மனதுக்கு உவகையளிக்கிறது.

அதுமட்டுமல்லாமல் பட்டுக்கோட்டை அழகிரி, மூவலூர் ராமாமிர்தம் அம்மையார், மன்னை அவர்கள், நமது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய அண்ணன் கோ.சி.மணி அவர்கள் என திராவிட இயக்கத்தின் முன்னோடிகள் எல்லாம் வாழ்ந்திருக்கக் கூடிய மண் இந்த மண். இப்படிப்பட்ட பெரிய தலைவர்களை பார்த்து வளரக்கூடிய வாய்ப்பை நானும் பெற்றிருக்கிறேன் என்பது எனக்கு வாழ்நாளில் கிடைத்திருக்கும் மிகப்பெரிய பெருமை.

தலைவர் கலைஞர் இந்த மண் மீது பாசத்தையும், நேசத்தையும், அன்பையும் பொழிந்தார். அவரிடம் சென்று, ‘நான் தஞ்சாவூர்லேர்ந்து வர்றேன்’ என்று சொன்னால், அவர் முகத்தில் உடனே ஒரு மகிழ்ச்சி வரும். புன்னகை பூக்கும். அதேபோலத்தான் நமது தலைவர் அவர்களுக்கும்.

சட்டமன்றத் தேர்தல் முடிந்த பிறகு இந்த பகுதியில் இருந்து ஒரு அமைச்சர் இல்லையே என்று கேட்டபோது, ‘நானே டெல்டாக்காரன் தானே…’ என்று சொல்லக்கூடிய அளவு இந்த மண் மீது காதலோடு இருக்கக் கூடியவர்தான் அண்ணன் தளபதி.

### தமிழ்நாட்டை தமிழ்நாடாக வைத்திருப்பதே சாதனை!

தலைவர் கலைஞர் செய்திருக்கிற சாதனைகளை கணக்கிட்டு சொல்ல முடியாது. தமிழ்நாட்டை உத்திரப்பிரதேசமாக வைத்திருக்காமல் அதை தமிழ்நாடாக மாற்றிக் காட்டியிருப்பதே தலைவர் கலைஞரின் சாதனைதான்.

இங்கே இருக்க கூடிய மக்களுக்கு உடம்பு சரியில்லை என்றால் மருத்துவமனைகளுக்கு போக முடியும். இந்த மண்ணிலே படித்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரியை திறந்தவர் கலைஞர்.

### விவசாயத்துக்கென தனி பட்ஜெட் கண்ட முதல்வர்!

அதுபோல கலைஞர் இலவச மின்சாரத் திட்டத்தைக் கொண்டுவரவில்லை என்றால் விவசாயமே இருந்திருக்காது என்று விவசாயிகளே சொல்லக் கூடிய அளவுக்கு விவசாயத்தையும், விவசாயிகளையும் காப்பாற்றியவர் கலைஞர். ஏழாயிரம் கோடி ரூபாய் விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய முதல் கையெழுத்திட்டவர் கலைஞர்.

அவர் வழியிலே கலைஞரின் ஆட்சியின் நீட்சியாக அண்ணன் தளபதி அவர்கள் தமிழ்நாட்டில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். இந்தியாவிலேயே முதல் முறையாக விவசாயத்துக்கு என்று தனி பட்ஜெட் போட்ட முதல்வர் நமது தளபதி அவர்கள்.

இந்த நாட்டில் விவசாயம்தான் மிகப் பெரிய தொழில். கொரோனா வந்த போது தொழிற்சாலைகள் மூடப்பட்டன, கடைகள் மூடப்பட்டன, வியாபாரம் கிடையாது. சிறு குறு தொழில்கள் மூடப்பட்டன. ஆனால் நிறுத்துங்கள் என்று யாராலும் சொல்ல முடியாத ஒன்று விவசாயம்தான். விவசாயிகளும் அப்போது வேலை செய்யாமல் இருந்திருந்தால் கோவிட் ஆல் இறந்தவர்களை விட பசியால் இறந்தவர்களே அதிகமாக இருந்திருக்கும்.

கோவிட் நேரத்தில் மருத்துவர்களுக்கு அடுத்து மக்களைக் காப்பாற்றியவர்கள் விவசாயிகள்தான். அப்படிப்பட்ட விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான விவசாயத்துக்கு தனி பட்ஜெட் என்பதை நிறைவேற்றியவர் நமது முதல்வர்.

### விவசாயிகள் மீது படையெடுத்தவர் மோடி!

ஆனால் விவசாயிகளுக்கு எதிராக தொடர்ந்து செயல்படும் ஒரு அரசு இருக்கிறது என்றால் அது ஒன்றியத்தில் செயல்படக் கூடிய மோடியின் பாஜக அரசுதான். விவசாயிகளுக்கு எதிராக மூன்று சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். அதற்கு எதிராக நாங்கள் நாடாளுமன்றத்தில் போராடி வெளியே சென்றபோது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் யாரும் இல்லை. அந்த நேரத்தில் தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்களை நிறைவேற்றுகிறார்கள். யாருடைய கருத்துகளையும் கேட்காமல் விவாதம் நடத்தாமல் சட்டங்களை நிறைவேற்றுகி றார்கள். நாடாளுமன்றத்துக்கு அவர்கள் தரும் மரியாதை இதுதான்.

அண்ணனன் பழனிமாணிக்கம் உள்ளிட்ட அத்தனை எதிர்க்கட்சி எம்பிக்களையும் சஸ்பெண்ட் செய்தார்கள். முதலில் சஸ்பெண்ட் செய்யப்பட்டது நான் தான். எதிர்க்கட்சி உறுப்பினர்களை சஸ்பெண்ட் செய்துவிட்டு நாடாளுமன்றத்தை நடத்திய பெருமை பாஜகவுக்குதான் உண்டு.

விவசாயிகள் அந்த சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் என்று ஒரு வருடம் விவசாயிகள் போராடினார்கள். போராடுகிற விவசாயிகளை சந்திக்க நாங்கள் சென்றால், அங்கே பல இரும்புக் கம்பி தடுப்புகள், போலீஸார் என குவிக்கப்பட்டிருந்தனர். போராடும் விவசாயிகளை யாரும் சென்று சந்தித்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இது போன்று செய்தார்கள்.

எத்தனை பேர் அந்த போராட்டத்திலே உயிரிழந்திருக்கிறார்கள் தெரியுமா? ஒரு அமைச்சரின் மகன் போராடிக் கொண்டிருந்த விவசாயிகள் மீது காரை ஏற்றி கொலையே செய்திருக்கிறார்.

இப்போது விவசாயிகள் மீண்டும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். குறைந்த பட்ச ஆதார விலை கேட்டு அவர்கள் டெல்லி நோக்கி சென்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எதிரி நாட்டு படையைத் தடுப்பது போல விவசாயிகளைத் தடுக்கிறார்கள். உண்மையிலேயே எதிரி நாடு வந்தபோது இவர்களுக்குத் தெரியவே இல்லை. எல்லையில் நாடு காணாமல் போய்க் கொண்டே இருக்கிறது. ஆனால் அதையெல்லாம் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

விவசாயிகள் நம் தலைநகருக்கு வரக் கூடாது என்பதற்காக வழியிலே டிரோனில் கண்ணீர்ப் புகை குண்டு, முள் மாதிரி இருக்கும் இரும்புக் கம்பிகளைக் கொண்டு தடுக்கிறார்கள். இதெல்லாம் பாஜகவின் புதிய கண்டுபிடிப்பு. இப்படி தன் கோர முகத்தை காட்டிக் கொண்டிருப்பதுதான் பாஜக.

இப்போது விவசாயிக்கு இலவச மின்சாரம் தரக் கூடாது என்றும், அப்படிக் கொடுத்தால் நிதியை நிறுத்திவிடுவோம் என்று அவர்கள் சொல்ல, அதில் கையெழுத்து போட்டது யார்? தமிழ்நாட்டிலேயே பெரிய விவசாயியான எடப்பாடி பழனிசாமி. பார்த்திருப்பீங்க தலையில் பச்சைத் துண்டு கட்டிக் கொண்டு போஸ்டர்களில் இருப்பார். அவர் விவசாயிகளுக்கு எதிரான சட்டத்தில் கையெழுத்து போட்டு இன்று நம்மை மிரட்டிக் கொண்டிருக்கிறார்.



ஆனால் இந்த மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்ச மாட்டேன் நான் கலைஞர் மகன் என்று ஒன்றிய அரசை எதிர்த்து தைரியமாக நின்று கொண்டிருக்கக் கூடியவர் நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி. எத்தனை எத்தனை மிரட்டல்கள்.

### தமிழுக்கு உங்கள் சான்றிதழ் தேவையில்லை… நிதியே தேவை!

இங்கே ஆளுநர் ஒருவர் இருக்கிறார். இரு முறை சட்டமன்றத்துக்கு வந்தார். ஆளுநர் உரையை படிக்கவில்லை என்றால் வீட்டிலேயே இருந்திருக்கலாமே? அங்கிருந்து கிளம்பி சட்டமன்றத்துக்கு வந்து படிக்க மாட்டேன் என்று சொல்லி வாக் அவுட் பண்ணுகிறார். இப்படி ஒரு ஆளுநர். தமிழகம் என்று சொல்லுங்கள், தமிழ்நாடு என்று சொல்லாதீர்கள் என்கிறார். தமிழை பற்றி தமிழ்நாட்டைப் பற்றி தெரியாது. ஆனால் தமிழர்களை புண்படுத்தும் வகையில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறார். இரண்டு திருக்குறளை சொல்லிவிட்டால் போதும் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது தமிழா வேறு என்ன மொழி என்று கூட நமக்குத் தெரியவில்லை.

பிரதமர் மோடி திருக்குறள் சொல்கிறார். பிரதமரே தமிழ் மிகப் பழமையான மொழி என்று சொல்கிறார் என அக்கட்சியினர் சொல்கிறார்கள். தமிழ் தொன்மையான மொழி என்று நீங்கள் சொல்லி எங்களுக்குத் தெரியவேண்டியதில்லை. தொன்மையும் தொடர்ச்சியும் மிக்க ஒரே மொழி தமிழ்.

சமஸ்கிருதத்தில் தொன்மை ஓரளவு இருக்கிறது நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் தொடர்ச்சி இருக்கிறதா? இன்று எத்தனை பேர் பேசுகிறார்கள்? ஆனால் தமிழை விட சமஸ்கிருதத்துக்கு 22 மடங்கு அதிகமாக நிதி ஒதுக்கியுள்ளீர்கள். தமிழ் தொன்மையானது என்று நீங்கள் சொல்ல வேண்டாம். நிதியைக் கொடுங்கள். உங்கள் பாராட்டு தமிழ் தாய்க்கு தேவையில்லை. எங்கள் தலைவர் கலைஞர், எழுத்தாளர்கள், எங்கள் முதல்வர் இருக்கிறார்கள். நீங்கள் நிதியைக் கொடுங்கள்.

### வரிப் பகிர்வில் வஞ்சிக்கப்பட்ட தமிழ்நாடு!

ஜிஎஸ்டி என்ற வகையில் வரியை தமிழ்நாட்டிடம் இருந்து வாங்கிக் கொண்டு அதை திருப்பித் தர மறுக்கிறார்கள். பக்கத்து வீட்டுக்காரரிடம் பணம் கொடுக்கிறீர்கள். அதைத் திரும்பக் கேட்டால் அவர் கொடுக்க மறுக்கிறார். என்ன செய்வீர்கள்? இப்படித்தான் ஒன்றிய அரசு செய்துகொண்டிருக்கிறது.

நாம் நல்லாட்சி செய்து கொண்டிருக்கிறோம். கல்வி அறிவு படைத்தவர்களாக மருத்துவ வசதி சாலை வசதிகளோடு தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழக அரசு. இதற்கு பாராட்டு கொடுக்க வேண்டுமா? பனிஷ்மெண்ட் கொடுக்க வேண்டுமா?

சில நாட்களுக்கு முன் எல்லா மாநிலத்துக்கும் வரி வருவாயில் பங்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதில் உத்திரப் பிரதேசத்துக்கு நம்மை விட ஐந்து மடங்கு அதிக நிதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நமக்கு தமிழ்நாட்டுக்கு கிள்ளிக் கொடுக்கிறார்கள். இதுவரை நமக்கு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையே 20 ஆயிரம் கோடி இருக்கிறது.

### நிர்மலாவின் அக்கறை யார் மீது?

சென்னை, தூத்துக்குடியில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. இரு மத்திய அமைச்சர்கள் வந்தார்கள். பிரதமர் மோடி அடிக்கடி வருகிறார். ஆனால் இதுவரை ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு ஒரு ரூபாய் கொடுத்திருக்கிறதா? தூத்துக்குடி வந்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கோயிலைச் சுற்றி சகதியாக இருக்கிறது என்றும், அய்யருக்கு சம்பளம் போதவில்லை என்றும் கவலைப்படுகிறார். ஒரு ரூபாயைக் கொடுக்கவில்லை.

நீ கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நான் கொடுப்பேன் என் மக்களை நான் காப்பாற்றுவேன் என்று நிவாரணம் வழங்கியவர் நமது அண்ணன் தளபதி அவர்கள். வீடுகளை இழந்தவர்களுக்கு நான்கு லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கியிருக்கிறார். விவசாயிகள், மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கியிருக்கிறார்.

பதவி ஏற்றுக் கொள்ளும்போது, ‘முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின்’ என்று பெருமையாக சொன்னாரே… அவர்தான் மக்களைக் காப்பாற்றக் கூடிய முதலமைச்சர். திரும்பத் திரும்ப இங்கே வந்து போகிற மோடிக்கு மக்கள் பற்றிய அக்கறை இல்லை, கவலை இல்லை.

### தன்னைத் தானே திட்டிக் கொள்ளும் மோடி!

அன்று எங்களை எல்லாம் மேடையில் வைத்துக் கொண்டே சொல்கிறார். ‘யுபிஏ அரசு எதையும் செய்யவில்லை. நாங்கள்தான் குலசேகரப்பட்டினம் திட்டத்தை அடிக்கல் நாட்டியிருக்கிறோம்’ என்று பிரதமர் பேசுகிறார். ஒரு உண்மை என்னவென்றால் திரு. சிதம்பரம் நிதியமைச்சராக இருந்தபோது தூத்துக்குடி வ.உ.சி. துறைமுக விரிவாக்கத்துக்காக 23 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அடுத்த ஆண்டே பா.ஜ.க. ஆட்சிக்கு வருகிறது. பாஜகவின் நிதியமைச்சர் அருண் ஜேட்லி அவர்கள் அதில் பாதியான 11 ஆயிரம் கோடி ரூபாயை அறிவிக்கிறார். அதன் பின் பத்து வருடங்களாக அதை கிடப்பில் போட்டு வைத்தது பா.ஜ.க.

இப்போது தேர்தல் வருவதால் தமிழ்நாட்டுக்கு செய்தோம் என்று சொல்வதற்காக இப்போது அடிக்கல் நாட்டிவிட்டு சென்றிருக்கிறார் நமது பிரதமர். மேடையில் மோடி உண்மையிலேயே திட்டிக் கொண்டது தன்னைத்தான். வேறு யாரையும் இல்லை.

எந்தத் திட்டத்தை அறிவித்து அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். மதுரையில் நைபர் ஆராய்ச்சி நிலையம் அறிவிக்கப்பட்டது. பணம் ஒதுக்கப்படவில்லை. எய்ம்ஸ் கட்டித் தருவேன் என்று சொன்னார்கள். எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. அக்கவுண்டில் பதினைந்து லட்சம் போடுவேன் என்று சொல்லி இரு ஆட்சி முடிந்து விட்டது. ஆனால் இப்போது வரை வரவில்லை.

### கலைஞர் கொடுத்த கலர் டிவி… தளபதி அளித்த மகளிர் உரிமைத் தொகை!

ஆனால் நாம் சொன்னதை எல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம். திமுக ஆட்சிக்கு வந்தால் மகளிருக்கு இலவச பஸ் பயணம் என்று சொன்னோம். அதை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம். விடியல் மகளிர் பயணம் மூலமாக சராசரியாக ஒவ்வொரு பெண்ணும் ஒரு மாதத்துக்கு 888 ரூபாய் சேமிக்கக் கூடிய அளவுக்கு பயனுள்ளதாக இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை அறிவித்த போது இதெல்லாம் சாத்தியமே இல்லை என்று பலரும் சொன்னார்கள்.

இப்படித்தான் 2006 ஆம் ஆண்டு இலவச கலர் டிவி தருவோம் என்று கலைஞர் சொன்னபோது அது முடியவே முடியாது என்று சொன்னார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்து அனைவருக்கும் இலவச கலர் டிவியை வழங்கினார் கலைஞர். இன்றும் பல வீடுகளில் அந்த டிவி வேலை செய்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் கலைஞரை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறது. அதன் பின் வந்த மிக்சி கிரைண்டர் என்னாச்சு எங்க போச்சு தெரியவில்லை.

இப்படி எதைச் செய்ய முடியாது என்று எதிர்க்கட்சிகள் விமர்சனம் வைக்கிறதோ அதையெல்லாம் செய்து காட்டிய இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை இதற்கு சரியான உதாரணம்.

வீட்டில் இருக்கும் பெண்கள் சும்மா இருப்பதாக பலரும் சொல்வார்கள். ஆனால் வீட்டில் இருக்கும் ஒவ்வொரு பெண்ணும் காலையில் எழுந்து சமைத்து, பிள்ளைகளுக்கு பரிமாறி அவர்களை பள்ளிக்கு அனுப்பி மதியம் சமைத்து, துணி துவைத்து, அதை மடித்து வைத்து, இரவு சாப்பாடு செய்து எல்லாரும் தூங்கிய பின் சமையலறையையும் சுத்தம் செய்துவிட்டு அதன் பிறகுதான் தூங்கச் செல்வார்கள். இவர்கள் சும்மா இருக்கிறார்களா?

வேலைக்கு செல்பவர்களுக்கு பண்டிகை, ஞாயிற்றுக் கிழமை என்றால் விடுமுறை உண்டு. ஆனால் வீட்டில் இருக்கும் பெண்களுக்கு அப்போது தான் டபுள் வேலை. இந்த உழைப்புக்கு நான் தலைவணங்குகிறேன். இந்த உழைப்புக்கு என்ன தந்தாலும் ஈடாகாது. ஆனால் அந்த உழைப்பை நான் பாராட்டுகிறேன் என்று சொல்லி மாதம் ஆயிரம் ரூபாய் அளித்தவர் நமது அண்ணன் முதல்வர்.

ஆயிரம் ரூபாயை நீங்கள் சேமித்து வைத்து நீங்கள் என்ன செய்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறீர்களோ… அதை உனக்கு உரிமையாக தருகிறேன் என்று தந்திருக்கக் கூடியவர் நமது முதலமைச்சர் அண்ணன்.

### கல்லூரி மாணவிகளின் மூத்த அண்ணன் முதல்வர் தளபதி!

பெண் பிள்ளைகள் என்றால் பொதுவாக படிக்க வைக்க மாட்டேன் என்றார்கள். காரணம் கல்யாண செலவு இருக்கு என்பார்கள். அதற்குத்தான் கலைஞர், ‘அந்த கல்யாண செலவை நான் தருகிறேன். பெண் குழந்தையை பத்தாவது வரைக்கும் படிக்க வை’ என்று சொன்னார். பத்தாவது வரைக்கும் படித்த பெண் அப்படியே விட்டு விடாது. எப்படியாவது பிளஸ் டூ படித்து கல்லூரிக்கு வந்துவிடும்.

அப்படி கல்லூரிக்கு வந்த பெண்ணுக்கு நான் உதவித் தொகை தருகிறேன் என்று சொல்லி மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகிறார் அண்ணன் தளபதி.

பெண்கள் பஸ்ஸில் போகிறார்கள். அதற்கு கட்டணம் இல்லை. அதைத் தாண்டி கல்லூரிக்கான பொருள்களை வாங்குவதற்கு சகோதரிக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தருகிற அண்ணன் தான் தளபதி அவர்கள்.

### தஞ்சைக்கு அள்ளித் தந்த பட்ஜெட்

தஞ்சாவூருக்கு தொழிற்சாலை இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த பட்ஜெட்டில் செங்கிப்பட்டி பக்கத்தில் 300 ஏக்கரில் சிப்காட் அறிவித்திருக்கிறார் நமது முதலமைச்சர். அதேபோல புதிய தகவல் தொழில் நுட்பப் பூங்காக்கள் தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. டைடல் பார்க் வந்தால் சுற்று சூழல் கெட்டுப் போகும் என்ற அச்சம் இல்லை. அப்படிப்பட்ட திட்டத்தை படித்த மாணவர்களுக்காக வழங்கியிருக்கிறார்.

### 100 நாள் வேலைத் திட்டத்தை நசுக்கும் மோடி அரசு!

அதேபோல விவசாய தொழிலாளர்களுக்கு ஒன்றிய அரசின் இந்த பத்து வருடத்தில் ஒரு சதவிகிதம் கூட சம்பளம் ஏறவில்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கு எதுவும் செய்யாமல் விவசாயிகளுக்கு எதிராக நடக்கும் ஆட்சி பாஜக ஆட்சி.

யுபிஏ காங்கிரஸ் ஆட்சியில் நூறு நாள் வேலைத் திட்டம் கொண்டுவரப் பட்டது. இப்போது இந்தியாவில் எந்த மாநிலத்துக்கு சென்றாலும் 100 நாள் வேலை சம்பளம் வரவில்லை என்று சொல்கிறார்கள். ஏனென்றால் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது விவசாய வேலை இல்லாத நாட்களில் கிராமப்புற மக்களுக்கு 100 நாட்களாவது வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக. ஆனால் இந்த பாஜக அரசு ஒவ்வொரு வருடமும் 100 நாள் திட்டத்துக்கான பண ஒதுக்கீட்டைக் குறைத்துக் கொண்டே வருகிறது.

98 ஆயிரம் கோடி, 72 ஆயிரம் கோடி, பின் 60 ஆயிரம் கோடியாக குறைக்கிறார்கள். இது எப்படி போதும் என்று நான் கேட்டேன். தேவை இருந்தால் அதிக ஒதுக்கீடு செய்வோம் என்று என்னிடம் பதில் சொன்னார்கள். இப்போது தேவை ஏற்பட்டுள்ளது. ஆனால் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. தமிழ்நாட்டுக்கு மட்டும் கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் 100 நாள் வேலைத் திட்ட நிதி வர வேண்டும். நாடு முழுதும் 100 நாள் யாருக்கும் வேலையில்லை.

மோடிக்கு மிகவும் பிடித்த மேற்கு வங்காள மாநிலத்துக்கு இரண்டு வருடமாக 100 நாள் வேலைத் திட்டத்துக்கான பணம் ஒதுக்கவே இல்லை. தமிழ்நாட்டுக்கு எந்தத் திட்டத்துக்குமே நிதி ஒதுக்கீடு இல்லை.

ஆனால் அவர்கள் சொல்கிறார்கள் நாம் ஸ்டிக்கர் ஒட்டிக் கொண்டிருக்கிறோம் என்று. ஒரு உதாரணம் சொல்கிறேன். பிரதமர் பெயரில் இருக்கும் வீடு கட்டும் திட்டத்துக்கு கால் வாசி ஒன்றிய அரசு நிதி தருகிறது. முக்கால் வாசி மாநில அரசு கொடுக்கிறது. அப்படியென்றால் இது முதலமைச்சர் வீடு கட்டும் திட்டம் தானே. அதற்கு பிரதமர் வீடு கட்டும் திட்டம் என்று ஸ்டிக்கர் ஒட்டியது யார்? பிரதமர் படம் இல்லாத இடமே கிடையாது. அடையாள அட்டைகளில் நம் படம் இருக்கோ இல்லையோ பிரதமர் படம் இருக்கும். இப்படி ஸ்டிக்கர் ஒட்டும் பழக்கம் இருப்பது யாருக்கு?

இதற்குக் காரணம், நீங்கள் யாரோடு கூட்டணியில் இருந்தீர்கள்? அதிமுகவோடு. இப்போதும் கூட்ட ணியில்தான் இருக்கிறீர்கள். அந்த அதிமுக எப்படி ஸ்டிக்கர் ஒட்டியதோ அதேபோல ஸ்டிக்கர் ஒட்டும் அரசுதான் ஒன்றிய அரசு.

வீடு கட்டும் திட்டத்தை நிறைவேற்றித் தந்துகொண்டிருப்பது நம்முடைய மாநில ஆட்சி, நமது தளபதி. இதுதான் உண்மை. இனிமேல் உங்களிடம் எதிர்பார்க்கக் கூடாது என்றுதான் கலைஞரின் கனவு இல்லம் 3.5 லட்சம் தருகிறேன் என்று அறிவித்துள்ள ஆட்சி நமது ஆட்சி. வீடு பழுதுபட்டிருந்தாலும் அதை மாற்றித் தருகிறேன் என்று தாயுள்ளத்தோடு சொல்லும் ஆட்சி நமது ஆட்சி.

நமது பிள்ளைகள் படித்து விட்டு வேலை இல்லாமல் தவிக்கக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு நான் முதல்வன் என்ற திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து முன்னேற்றுகிற ஆட்சி நமது தி.மு.க. ஆட்சி.

### *தளபதிக்கு தூத்துக்குடி அன்னையின் கண்ணீர் நன்றி*

இப்படி ஒவ்வொரு நாளும் மக்களுக்காகவே சிந்திக்கிற ஆட்சி நமது ஆட்சி. இன்று காலையில் தூத்துக்குடியில் இருந்து ஸ்டெர்லைட் போராளிகள் வந்து தளபதி அண்ணனை முதல்வரை பார்த்து நன்றி சொல்லிவிட்டுப் போகிறார்கள்.

அதில் ஒரு தாய், ‘15 பேரை சுட்டுக் கொன்றார்கள் அதிமுக ஆட்சியில். அதில் என் மகனை நான் இழந்திருக்கிறேன். அந்த இழப்புக்கு நீங்கள் நியாயம் பெற்றுத் தந்திருக்கிறீர்கள்’ என்று அந்த தாய் கண்ணீரோடு செய்தி சொல்லி அனுப்பியிருக்கிறார். பாதிக்கப்பட்ட அந்த மக்களோடு நின்று அவர்களுக்கு நியாயம் பெற்றுத் தந்திருக்கக் கூடிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. ஆனால் போராடிய மக்கள் மீது துப்பாக்கிச் சூட்டை ஏவி விட்டு 15 பேரை கொலை செய்து இன்னும் பலரை பாதிப்பு அடையச் செய்தது அதிமுக ஆட்சி. அவர்கள் இன்று நம்மைப் பார்த்து கேள்விக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று நமது மாநில உரிமைகள் எல்லாவற்றையும் கொண்டுபோய் ஒன்றிய பாஜக அரசின் காலடியில் வைத்து தொழுதுவிட்டு வந்தவர்கள்தான் அவர்கள்.,

ஆனால் இந்த மாநிலத்தின் பண்பாடு, கலாச்சாரம், உரிமைகள், நலன் என அனைத்தையும் பாதுகாக்கக் கூடிய அரண் நமது முதலமைச்சர் தளபதி அவர்கள்.

### இந்தத் தேர்தல் அரசியலுக்கானது மட்டுமல்ல…

இந்தத் தேர்தலில் நாங்கள் பெரிய வெற்றி பெறுவோம் என்று சொல்லி சிலர் திரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் பெரியாரின் மண்ணிலே, அண்ணாவின் மண்ணிலே, கலைஞரின் மண்ணிலே, திராவிட மண்ணிலே மத அரசியலுக்கு இடமில்லை, தமிழ் துரோகிகளுக்கு இடமில்லை என்று பூஜ்யத்தைக் காட்டி அவர்களைத் துரத்தும் தேர்தல் இந்தத் தேர்தல்.

இந்தத் தேர்தல் வெறும் அரசியலுக்கான தேர்தல் அல்ல. நமது எதிர்காலத்தை, நமது பெண்களின் எதிர்காலத்தை, நமது பிள்ளைகளின் எதிர்காலத்தை இந்த நாட்டின் அமைதியை பாதுகாக்க வேண்டிய தேர்தல். அதற்கான கடமை, கடப்பாடு நமக்கு இருக்கிறது.

நாற்பதுக்கு நாற்பதும் நமக்கே கிடைக்க வேண்டும். ஒரு இடம் கூட வேறு யாருக்கும் கிடைத்துவிடக் கூடாது என்று உறுதியோடு நாம் உழைக்க வேண்டும். இந்த வெற்றியை தளபதியின் கரங்களிலே நாம் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

# பாசிச பா.ஜ.க. வீழட்டும்! ஊழல் இல்லாத இந்தியா பிறக்கட்டும்! 4

தமிழ்க் கேள்வி
**தி.செந்தில்வேல்**
(மூத்த ஊடகவியலாளர்)



பா.ஜ.க. என்றால் “ஊழல்”, ஊழல் என்றால் “பா.ஜ.க.”. இதுதான் உண்மை. ஊழலை ஒழிக்க வந்த உத்தமர்கள் நாங்கள் என்று வேட மிட்டு பா.ஜ.க.வினர் 10 ஆண்டுகளில் செய்த ஊழல்களால் இன்று உலகின் பணக்கார கட்சியாக மாறியிருக்கிறது பா.ஜ.க.

இப்படி முறைகேடாக ஈட்டும் பணத்தைக் கொண்டு எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்குவது, எம்.பி.க்களை விலை பேசுவது, எதிர்க்கட்சிக் கூட்டணியை உடைப்பது உள்ளிட்ட ஜனநாயக விரோதப் போக்கை தொடர்ந்து செய்து வருகிறது மோடியின் பா.ஜ.க.

பா.ஜ.க.வின் ஊழல்களால் ஏழை, எளிய மக்கள் படும் இன்னல்களையும், இந்தியப் பொருளாதாரம் அடைந்துள்ள பின்னடைவுகளையும்




நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

**மோடியின் ஊழல்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்:**

எதிர்க்கட்சிகள் கூட அல்ல, மத்திய கணக்குத் தணிக்கைக் குழு ( சிஏஜி ) மோடி அரசின் இமாலய ஊழல்களை அம்பலப்படுத்தியது. குறிப்பாக, மனிதர்களின் உயிர்காக்கும் மருத்துவ சிகிச்சையில் கூட பெரும் ஊழல் செய்துள்ளது மோடியின் பா.ஜ.க. அரசு.

**இறந்து போனவர்களின் பெயரிலும் ஊழல் (ஆயுஷ்மான் பாரத்திட்டம்):**

ஆயுஷ்மான் பாரத் என்ற பெயரில் ஒன்றிய அரசு மருத்துவ காப்பீட்டுத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்கு பயனாளிகளைச் சேர்ப்பதில் பெரும் முறைகேடு நடந்திருக்கிறது என்று சி.ஏ.ஜி. சொன்ன குற்றச்சாட்டிற்கு இந்த நிமிடம் வரை மோடியிடம் இருந்து எந்த பதிலும் இல்லை. மாறாக, இந்த




பெரும் ஊழலை வெளிக்கொண்டு வந்த அதிகாரிகளை இடம் மாற்றியது மோடி அரசு.

ஒரே அலைபேசி எண்ணில் ஏழரை லட்சம் பயனாளிகளை இணைத்து பெரும் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இந்தியாவில் அலைபேசி எண்கள் அனைத்தும் பத்து இலக்க எண்கள் கொண்டவை. அடைப்புக் குறிக்குள் (9999999999) உள்ள ஒரு எண்ணில் மட்டும் ஏழரை லட்சம் பயனாளிகளை சேர்த்திருக்கிறது மோடி அரசு.



மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துபோனவர்களுக்கு, அவர்கள் இறந்த பிறகு சிகிச்சை அளித்ததாகச் சொல்லி பணம் எடுக்கப்பட்டுள்ளது. இறந்து போனவர்களைக் கூட பா.ஜ.க. விட்டுவைக்கவில்லை .அவர்கள் பெயரிலும் ஏதேனும் ஊழல் செய்ய முடியுமா என்றஅளவிற்குஊழலில்ஊறித்திளைத்துள்ளது பா.ஜ.க.

**சாலைகள் அமைக்கப்பட்டதில் நடைபெற்ற ஊழல்கள்**

**(1.துவாரகா விரைவுச் சாலை திட்டம்):**


சாலைகள் அமைக்கப்பட்டதில் நடைபெற்ற ஊழலைக் கேட்டால் நமக்கு தலையே சுற்றுகிறது. துவாரகா விரைவுச் சாலை திட்டம். இதுவே நாட்டின் முதல் 8 வழிச் சாலை திட்டமாக அறியப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஹரியானாவில் 18.9 கிலோ மீட்டருக்கும், டெல்லியில்10.1கிலோமீட்டர்தூரமும் சாலைஅமைக்க திட்டமிடப்பட்டது.

அதற்காக திட்டச்செலவு ஒருகிலோமீட்டருக்கு ரூ.18 கோடி என மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் திட்டத்தை செயல்படுத்தும்போது ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.250 கோடி என்றது மோடி அரசு. கிலோ மீட்டருக்கு ரூ.18 கோடிக்குதிட்டமிடப்பட்ட சாலை, கிலோ மீட்டருக்கு ரூ.250 கோடியாக உயர்ந்திருக்கிறது எனில், இதில் நடைபெற்றுள்ள ஊழலை கணக்கிட்டுக் கொள்ளுங்கள் தலையே சுற்றும்.

**2 .பாரத்மாலா திட்டம்:**

இதே போல் மற்றொரு திட்டம் பாரத்மாலா திட்டம். இந்தியா முழுவதும் உள்ள சாலைகள், விரைவுச் சாலைகள், நெடுஞ்சாலைகளை இணைக்கும் திட்டம். இதன் கீழ் முதற்கட்டமாக 34,800 கிலோ மீட்டர் சாலை அமைக்க திட்டமிடப்பட்டது.

இதற்காக ஒன்றிய அமைச்சரவை ரூ. 5,35,000 கோடி நிதி ஒதுக்கியது. (அதாவது ஒரு கிலோ மீட்டருக்கு 15.37 கோடி ரூபாய்) ஆனால், 26,316 கிலோமீட்டர் சாலை அமைக்க ரூ.8,46,588 கோடி மதிப்பில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதாக சிஏஜி தெரிவித்தது. இதன் படி ஒருகிலோ மீட்டர் சாலைக்கு ரூ.32.17 கோடி செலவிடப்பட்டுள்ளது. இப்படி சாலைகள் போடுவதில் மட்டும் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் பல கோடி ரூபாயை சுருட்டியுள்ளது பா.ஜ.க.



**ராமர் பெயரில் நடந்த ஊழல் :**

மக்களைத்தான் இவர்கள் ஏமாற்றுகிறார்கள் என்றால் இவர்கள் வார்த்தைக்கு வார்த்தை சொல்லும் அயோத்தி ராமரையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை.

அயோத்தியில் ராமர் கோவில் தொடர்பான பணிகளுக்கு ஒப்பந்தங்கள் கொடுத்ததில் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து பெற வேண்டிய உத்தரவாதத் தொகையை விட குறைவான அளவே பெறப்பட்டுள்ளது என்று கூறும் சிஏஜி இதன் மூலம் அரசுக்கு ரூ.8,22 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாகச் சொல்கிறது.

ஏற்கனவே ராமர் கோவில் பணிகளுக்காக நிலத்தை பத்திரப்பதிவு செய்ததில் பெரும் முறைகேடு நடைபெற்றதாக எழுந்த குற்றச்சாட்டுகளுக்கும்முறையாக பா.ஜ.க. இது வரை எந்த பதிலும் சொல்லவில்லை. மாறாக, மக்களிடம் இந்த உண்மைகளைச் சொன்ன அதிகாரிகளை



பந்தாடியது பா.ஜ.க.

**தேர்தல் நிதிப் பத்திரங்கள் (பா.ஜ.க. அடித்த கொள்ளை) :**

இவை அனைத்திற்கும் மேலாக, தேர்தல் நிதிப் பத்திரங்கள் என்ற பெயரில் பா.ஜ.க. வசூலித்த பணம் ரூ.6500 கோடிக்கும் அதிகம். யாரிடம் இருந்து பணம் பெறுகிறோம் என்பதைச் சொல்ல வேண்டிய தேவையில்லை என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் வெளிப்படைத் தன்மையின்றி பல்லாயிரம் கோடி ரூபாயை வசூலித்துள்ளது பா.ஜ.க.

நீதிமன்றத்திற்கு இது தொடர்பான வழக்கு சென்ற போது, நீதிபதிகள் அதிர்ந்து போயினர். தேர்தல் நிதிப்பத்திரங்கள் சட்ட விரோதமானவ என்று உச்ச நீதிமன்றம் சொன்ன தீர்ப்பு வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பு.. இந்த வழக்கின் தீர்ப்பில் நீதிபதிகள் சுட்டிக்காட்டிய ஒவ்வொன்றும் பா.ஜ.க. விற்குசம்மட்டி அடியாக அமைந்திருந்தது.

அரசியல் சட்டப் பிரிவு 19(1)(a)இன் கீழ் தகவல் பெறும் உரிமைக்கு எதிரானதாக தேர்தல் பத்திர திட்டம் இருப்பதாக நீதிபதிகள் கூறினர். நிறுவனங்கள் அளிக்கும் நன்கொடைகள் முழுக்க முழுக்க “பதில் உதவியை எதிர்பார்க்கும்” நோக்கங்களுக்காக மட்டுமே இருப்பதால், தேர்தல் பத்திரங்கள் மூலம் கார்ப்பரேட் நன்கொடைகள் பற்றிய தகவல்களை வெளியிட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.



யார் யாரிடம் இருந்து பணம் பெறப்பட்டது என்ற விவரங்களை தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அப்படி பதிவேற்றப்படும் போது பா.ஜ.க.விற்கு பெருமளவு நிதியளித்த நிறுவனங்கள் எவை என்பதும். அதற்கு கைமாறாக அந்த நிறுவனங்கள் ஏதும் ஆதாயம் பெற்றனரா என்பதும்தெரியவரும்.

பா.ஜ.க. ஊழல் செய்வது மட்டுமல்ல, எதிர்கட்சிகளில் இருப்பவர்களின் மீது பெரும் ஊழல் குற்றச்சாட்டுகளை பா.ஜ.க.சொல்லும். பின்னர் அவர்களை பா.ஜ.க.வில் இணைத்துக் கொள்ளும். அவ்வாறு இணைந்தவர்கள் மீதான அனைத்து சட்ட நடவடிக்கைகளும் நிறுத்தி வைக்கப்படும். இது இந்தியா முழுவதும் நடக்கும் கூத்து. அஜீத் பவார் தொடங்கி பலரும் பா.ஜ.க.வால் ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமந்து பின் பா.ஜ.க.வில் இணைந்து பதவி சுகங்களைஅனுபவித்துக் கொண்டிருப்பவர்கள். இவ்வளவுதான் பா.ஜ.க.வின் ஊழல் ஒழிப்பு.

**ரபேல் விமான ஊழல்:**

ரபேல் விமானம் வாங்கியதில் ஊழல் என்று குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், அது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடந்த போது, ரபேல் விமானம் தொடர்பான ஆவணங்கள் பாதுகாப்புத் துறை அலுவலகத்தில் இருந்து காணாமல் போய் விட்டன என்று நீதிமன்றத்தில் பா.ஜ.க. அரசு தெரிவித்தபோது பா.ஜ.க.வின் ஊழல் ஒழிப்பு லட்சணத்தை நாடே புரிந்து கொண்டது.

என்ன வேண்டுமானாலும் ஊழல் செய்யலாம். மக்களிடம் மதவாதத்தை முன் வைத்து வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று மோடி தப்புக் கணக்குப் போடுகிறார்.

கர்நாடகத்தில் பா.ஜ.க. ஆட்சியில் ஊழல் மலிந்து போனதை ஒப்பந்தத்தாரர்களே வீதிக்கு வந்து சொன்னதையும் அதன் விளைவாக மக்கள் கர்நாடகத்தில் பா.ஜ.க.வை படுதோல்வி அடையச் செய்ததையும் நாம் பார்த்தோம்.

அதேபோல் வரும் மக்களவைத் தேர்தலில் ஊழல் மலிந்த இந்த மோடியையும் பாஜகவையும் மக்கள் படுதோல்வி அடையச் செய்வார்கள் என்பது நிச்சயம். பாசிச பா.ஜ.க. வீழட்டும், ஊழலற்ற புதிய இந்தியா பிறக்கட்டும்.

**தொடரும்....**

---

சாமளாபுரம் தேர்வு நிலைப் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில்

# ரூ.4.25 கோடி மதிப்பீட்டில் 24 புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

*திருப்பூர், மார்ச் 5 -*

*திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சாமளாபுரம் தேர்வு நிலைப் பேரூராட்சி, அய்யாம்பாளையத்தில் பொது நிதி, நபார்டு திட்டம், அம்ரூத் 2.0 திட்டம் மற்றும் 15 வது நிதிக்குழு மானியம் ஆகிய திட்டத்தின் கீழ் ரூ.4.25 கோடி மதிப்பீட்டில் 24 திட்டப்பணிகளை 02.03.2024 சனிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் சாமளாபுரம் தேர்வு நிலைப் பேரூராட்சி, அய்யம்பாளையத்தில் பொது நிதியின் கீழ் ரூ.7.90 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 7, பெருமாம்பாளையம் பகுதியில் போர்வெல் அமைத்து குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் பணி, ரூ.95,000/ மதிப்பீட்டில் வார்டு எண் .6 பரம சிவம்பாளையம் கிணற்று நீர் தொட்டியிலிருந்து ஓம் சக்தி கோவில் வரை குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் பணி,*

*ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 6 பரமசிவம்பாளையம் நாலாந் தோட்டம் பகுதியில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி, நபர்டு திட்டத்தின் கீழ் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் வார்டு எண் 15 அய்யம்பாளையம் பகுதியில் தார்சாலை அமைத்தல் பணி, அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 11 சாமளாபுரம் பூங்கா நகரில் பூங்கா மேம்பாடு செய்தல் பணி, 15 வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 5 வேலாயுதம் பாளையம் பகுதியில் 1,00,000 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட சம்ப் கட்டுதல் பணி,*

*ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 8 காளிபாளையம் பகுதியில் வடிகால் கட்டுதல் பணி, ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 5 வேலாயுதம் பாளையம் உரக்கிடங்கில் காவலர் அறை கட்டுதல் பணி, ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 5 வேலாயுதம் பாளையம் பள்ளிக்கூடம் பின்புறம் வடிகால் கட்டுதல் பணி, ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 5 வேலாயுதம் பாளையம் உரக்கிடங்கில் தார் சாலை அமைத்தல் பணி, ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 5 வேலாயுதம் பாளையம் உரக்கிடங்கில் போர்வெல் அமைத்தல் பணி, ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் எண் 4 பள்ள பாளையம் பகுதியில் துணை சுகாதார மையம் கட்டுதல் பணி, ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 8 காளிபாளையம் பகுதியில் கான்கிரீட் சாலை அமைத்தல் பணி, பொது நிதியின் கீழ் ரூ.1.65 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 11 சாமளாபுரம் ரட்சகர் வீதியில் சிறுபாலம் கட்டுதல் பணி, ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 9 காளிபாளையம் மேற்கு வீதியில் 3 குறுக்கு வீதிகளில் தார்சாலை பலப்படுத்துதல் பணி, ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 9 காளிபாளையம் மேற்கு வீதி முதல் கழிப்பிடம் உள்ள வீதி வரை தார்சாலை பலப்படுத்துதல் பணி, ரூ.19.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 11 சாமளாபுரம் நடுவளவு வீதியில் கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் புனரமைப்பு செய்தல் பணி, ரூ.19.20 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 2 பள்ளபாளையம் டேங்க் முதல் பிள்ளையார் கோவில் வரை வடிகால் புனர மைப்பு செய்தல் பணி,*

*ரூ.14.20 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 3 பள்ளபாளையம் பிள்ளையார் கோவில் வீதியில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ரூ.19.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 4 பள்ளபாளையம் கிழக்கு பகுதியில் தார்சாலை பலப்படுத்துதல் பணி, பொது நிதியின் கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 5 வேலாயுதம் பாளையம் கலைஞர் வீதி மெயின் சாலை தார்சாலை பலப்படுத்துதல் பணி, ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 12 கள்ளப்பாளையம் பெருமாள் கோவில் முதல் சுடுகாடு வரை வடிகால் புனரமைப்பு பணி, ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 13 மாரியம்மன் கோவில் வீதி கே.ஜி. ஆர் வீடு முதல் ஓர்கஷாப் மணி வீடு வரை வடிகால் புனரமைப்பு செய்தல் மற்றும் வார்டு எண் 14 கருகம் பாளையம் மாரியம்மன் கோவில் வீதியில் 3 இடங்களில் சிறுபாலம் சீரமைப்பு செய்தல் பணி, ரூ.15.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 8 காளிபாளையம் சாவடி வீதிகளில் கான்கிரீட் சாலை அமைத்தல் பணி என மொத்தம் ரூ.4,25,40,000/ மதிப்பீட்டில் 24 திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், சமாளாபுரம் தேர்வு நிலை பேரூராட்சி தலைவர் விநாயக பழனிச்சாமி, செயல் அலுவலர் ஆனந்த குமார், மாவட்ட அறங்காவல் குழுத்தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.*



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளினை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் ஆத்தூர் மஞ்சினியில் உள்ள் முதியோர் இல்லத்தில் மாலை நேர சிற்றுண்டி வழங்கினர். நிகழ்ச்சியில் ஆத்தூர் ஒன்றிய கழகச் செயலாளர் டாக்டர் வே.செழியன், மாவட்ட தலைவர் சந்திரசேகரன், மாவட்ட துணைத் தலைவர் கோபிநாத், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ராஜகோபால், மதியழகன், சங்கர், அப்சர்அலி மற்றும் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செல்வராஜ், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ராஜவேல், ஒன்றியக் குழு உறுப்பினர் அய்யாகண்ணு, நடராஜன், வீராசாமி, வேலுமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், தெங்குமரஹாடா ஊராட்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் 3.3.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 91 பயனாளிகளுக்கு ரூ.10.96 இலட்சம் மதிப்பீட்டிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு. அருணா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவடிவேல், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. கீர்த்தி பிரியதர்சினி உட்பட பலர் உள்ளனர்.



"இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல்" புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வகோட்டை ஊராட்சியில் மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, வீடுகள் தோறும் கழக அரசின் சாதனைகள்அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் எம் பரமசிவம், மா.தமிழ் ஐயா, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ராஜா, ஒன்றிய கவுன்சிலர் நியூஸ் ராஜேந்திரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கலையரசன், கந்தர்வகோட்டை ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஜானகிராமன் உள்ளிட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



கரூர் மாநகர தி.மு.க. சார்பில், "எல்லோருக்கும் எல்லாம்" திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் கரூர் 80 அடி சாலையில் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி நடைபெற்றது. தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார்.

### மயிலாடுதுறை - நாகை - திருவாரூர் மாவட்டங்களின்

# 12,653 பயனாளிகளுக்கு ரூ.143.46 கோடி நல உதவிகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்புரை!

மயிலாடுதுறை மார்ச் 5.

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் மற்றும் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களின் முடிவுற்ற பணிகள் திறந்து வைத்தும், புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நட்டியும் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழா நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ரூ. 114.48 கோடி மதிப்பில் கட்டப்பட்ட புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் மயிலாடுதுறை மாவட்டத்தில் 34 பணிகளுக்கு ரூ.150.42 கோடியும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 5 பணிகள் ரூ.259.31 கோடியும் திருவாரூர் மாவட்டத்தில் 32 பணிகள் ரூ 13.63. கோடி என 71 பணிகளுக்கு ரூ 423.36 மதிப்பிலான புதிய கட்டிடங்களை திறந்து வைத்தும் மயிலாடுதுறை மாவட்டத்தில் 37 பணிகளுக்கு ரூ.80.72 மதிப்பிலும்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 3 பணிகளுக்கு ரூ. 7.90 கோடி என 40 பணிகளை ரூ88.62 கோடி மதிப்பிலான கட்டிடங்களை திறந்து வைத்தும், அவர் பேசினார்.

மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த, 8,632 பயனாளிகளுக்கு ரூ.128.49 கோடியும் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 2,660 பயனாளிகளுக்கு ரூ 9.34 கோடியும், திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 1,961 பயனாளிகளுக்கு ரூ.5.63 கோடி என மொத்தம் 12,653 பயனாளிகளுக்கு ரூ143.46 கோடி மதிப்பிலான நல உதவிகள் என மொத்தம் ரூ 655.44 கோடி மதிப்பில் கட்டப்பட்ட கட்டிடங்களை திறந்து வைத்தும், புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டியும் 12, 653 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோட்டில்


# அ.தி.மு.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

### மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்

நாமக்கல், மார்ச் 5 -

நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு வேலூர் சாலையில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அ.தி.மு.க. உள்ளிட்ட மாற்று கட்சியில் இருந்து தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் வட்டூர் தங்கவேல் தலைமை வகித்தார். ஆதிதிராவிடர் நலக்குழு ராஜவேலு ஏற்பாட்டில் வட்டூர் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி, நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மண்டல நகரமைப்பு திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். தி.மு.க.வில் இணைய வந்த இளைஞர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்றார். இதனை தொடர்ந்து எஸ்.எம்.மதுரா செந்தில் பேசும் போது, ஒரு கோடி தொண்டர்களைக் கொண்ட இயக்கத்தில் இணைந்து உள்ளீர்கள். இனி உங்களுக்கு தி.மு.க. பக்கபலமாக இருக்கும். தற்போது அ.தி.மு.க. ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்தது போல் இல்லாமல், தற்போது ஜாதி கட்சியாக மாறி உள்ளது. அதனால் கட்சியில் இருந்து ஏராளமான பிரிந்து தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டு வருகின்றனர். மறைந்த முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு பணிகளை வழங்கி உள்ளார். தற்போது தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏராளமான நலத்திட்ட உதவிகளையும் செய்து, அரசு பணிகளில் வேலைகளையும் வழங்கி வருகிறார் எனக் கூறினார். இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. ஒன்றிய செயலாளர் வட்டூர் தங்கவேல், மாநில வலைதள பொறுப்பாளரும் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினருமான ரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கலைஞர் 100
1924 - 2023
SRI ARTS
நாடும் நமதே ! நாற்பதும் நமதே !!
மார்ச்-5
31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
திராவிடமே எனது பேச்சு.... கலைஞரே எனது மூச்சு ....
என்று கழகத்திற்காக தனது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்த
புரவலர்
திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள்
என்றும் உங்கள் வழியில்... கழக பணியில்...
அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA.,
மாவட்டக் கழகச் செயலாளர்-பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க

# இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்!

செம்மையா ரீச் ஆகிட்டிருக்கு. நான் சென்று கொண்டிருக்கும் கிராமங்களில்... மக்களை பார்க்கப் பார்க்க... அவர்களிடம் பேசப்பேச... நான் உட்பட, என்னுடன் வரும் கட்சிக்காரர்களுக்கே உற்சாகம் தொற்றிக்கொண்டு விட்டது..!

கடந்த இரண்டரை ஆண்டுகால விடியல் ஆட்சியின் முக்கியமான சில பல சாதனைகளை மட்டும் பட்டியலிட்ட நோட்டீஸ் ஒன்று ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் குடும்ப தலைவிகளை அழைத்துக் கொடுப்போம். இதை முழுசா படிச்சுப்பாருங்க... இந்த பட்டியல்ல, நீங்க பலன் பெற்ற, நீங்க பயன்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்கள் இருந்தா சொல்லுங்கன்னு சொல்லும் போதே... ஒவ்வொரு பெண்ணும், தாமாகவே முன்வந்து, 1000 ரூபாய் உரிமைத் தொகை கிடைக்குதுண்ணே... டவுன் பஸ்ல ஃப்ரீயா போறேண்ணே. இப்படியாக சொல்கிறார்கள்..!



அப்படி தாமாக முன்வந்து சொல்ல தயங்குபவர்களிடம், இதெல்லாம் உங்களுக்கு வருதா..?! கிடைக்குதா..?! பயன்படுத்துறீங்களான்னு கேட்டால்... மகிழ்ச்சியான அக்ஸெப்டன்ஸ் வருகிறது.

நான் செல்வது கிராமப்பகுதிகள் என்பதால், கிட்டத்தட்ட பாதி வீடுகளுக்கு மேல், அவர்கள் வீட்டு பிள்ளைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் கிடைப்பதை மகிழ்ச்சியோடு பகிர்ந்துகொள்கிறார்கள்.

பத்து வீட்டிற்கு ஒரு வீட்டிலாவது.... புதுமைப்பெண் திட்டத்தால் மாதம் 1000 ரூபாய் பலன் பெறும் கல்லூரி மாணவி ஒருவர் இருக்கிறார். எங்க ஆம்பள பசங்களுக்கும் கிடைச்சா நல்லாருக்கும்ண்ணே என்று கேட்பவர்களிடம்... இந்த பட்ஜெட்டில் தலைவர் அதையும் அறிவிச்சிட்டார்ன்னு சொன்னவுடன்... ஒரு பெண் துள்ளிக்குதித்து கைத்தட்டியவாறே மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்...!



நான் முதல்வன் திட்டத்தில் திறன்மேம்பாட்டு பயிற்சி, மாணவ மாணவிகளிடையே நன்கு ஊடுருவியிருக்கின்றதை காணமுடிந்தது..! நான் இதுவரை பார்த்ததில் நம்மைக் காக்கும் 48 மணி நேரம் திட்டத்தால் பலனடைந்து உயிர் பிழைத்து ஒரு அதிமுக தோழர், தலைவரின் அதி தீவிர விசுவாசியாக பேசியதை கேட்ட பொழுது எங்கள் எல்லோருக்குமே கண்கள் பனித்து விட்டன...!

எல்லாத்துக்கும் மேல... முதல்வரின் கிராமப்புற சாலைகள் திட்டம், அட்டகாசமான பேசுபொருளாக கிராமங்களில் இருக்கின்றது. ஒவ்வொரு தெருவும் புதிதாக புனரமைக்கப்பட்டது போல பளீர் என்று இருப்பதை மக்கள் ரொம்பவே ரசிக்கின்றனர்...!

ஒரு வீட்டில் எண்பது வயதிற்கு மேலான பாரம்பரியமான அதிமுக கணவன் மனைவி... அந்த பாட்டியிடம் விளக்கி விட்டு, வேறு எந்த குறை இருந்தாலும், கேட்டுட்டு வரச்சொலித் தான் தலைவர் எங்களை எல்லாம் உங்கள் ஒவ்வொருவர் வீட்டுக்கும் அனுப்பியிருக்கார்... நீங்க ஏதாவது... குறையோ, தேவையோ, கோரிக்கையோ சொன்னால் அதை நாங்க எழுதிட்டுப் போய்... அதை தலைவர் உடனே சரி செய்து கொடுத்திடுவார் என்ற பொழுது... அந்த பொக்கை வாய் பாட்டி, சிரித்தவாறே சொன்னார்... ஒரு தேவையும் இல்ல தம்பி... எனக்கு ஓ ஏ பி 1200 ரூவா வருது... எங்க ரெண்டு மருமகள்களுக்கும் 1000 ரூவா வருது... டவுன் பஸ்ல ஃப்ரீயா கும்பகோணம், மாயாரம், திருவாரூர்ன்னு போய்ட்டு வர்றோம்... எங்க பேரப்பசங்க கான்வெண்ட்ல படிக்கிதுங்க... அதுங்கள கவர்மெண்ட் ஸ்கூல்ல அடுத்த வருஷம் சேர்த்துடலாம்ன்னு இருக்கோம்... காலை டிஃபனும் ஃப்ரீயாம்ல..?! அப்றம் காலேஜ் போனா மாசம் 1000 ரூபாயாம்ல..?!

ரொம்ப மகிழ்ச்சியா இருக்கோம்ன்னு உங்க தலைவர்ட்ட சொல்லிடுங்க.... ரோடு தான் ரொம்ப காலமா... படு மோசமா இருந்திச்சி. இப்போ அதையும் டவுன்ல இருக்குற ரோடு மாதிரி போட்டு கொடுத்திட்டாங்க. பசங்க தான் அதுல வேக வேகமா பைக்ல போறாங்க... பயமா இருக்கு... வேகத் தடை (ஸ்பீட் பிரேக்கர்) போட்டு கொடுத்தா நல்லாயிருக்கும் தம்பி... அத மட்டும் எழுதிக்குங்க...

அந்த அம்மா நிறுத்தி நிதானமாக பேசியது.... ச்சான்ஸே இல்லை ஒவ்வொரு வீட்டிலும் தலைவர் போய் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து விட்டிருப்பதை அப்பட்டமாக உணர்த்தியது..!

உள்ளூர் கட்சிக்காரர்களுக்கு எல்லாம் ரொம்ப திருப்தி... அதோட ரொம்ப பெருமையாக வேறு ஃபீல் பண்ண ஆரம்பிச்சிட்டாங்க. அண்ணே இந்த பக்கம்ல்லாம் கொஞ்சம் பிரச்சினைன்னாலும், நாம ஓட்டுக்கேட்டு வரும் போது... பிலு பிலுன்னு பிடிச்சிப்பாங்கண்ணே... இப்போ என்ன குறை இருக்குன்னு கேட்டா கூட யோசிச்சி யோசிச்சி தான் சொல்ல முடியுது... பல பேர் குறையே இல்லன்னு சொல்றத இப்பத்தாண்ணே முதன் முறையா கேட்கிறேன் என்று உணர்ச்சிவசப்படுகின்றனர்..!



பொதுவான கிராமப்புற மக்களின் கோரிக்கையாக இருந்தது காங்க்ரீட் வீடு தான். கலைஞர் கனவு இல்லம் திட்டம் வந்திருப்பதை எடுத்துச் சொல்லி, அதில் மூனரை லட்சம் என்பதையும் சொல்லி, உங்கள் வீடுகள் விரைவில் காங்க்ரீட் கூரை பெறும் என்றவுடன் நிம்மதியடைகின்றனர்.

ஒரு ஆட்சின்னா என்ன..?! ஒரு அரசன்னா எப்படி இருக்கனும்ங்கறத தலைவர் தளபதியார், இனி வரும் ஆட்சியாளர்களுக்கு அளவுகோல் எனப்படும் யார்ட் ஸ்டிக்கை நிர்ணயம் செய்து விட்டிருக்கின்றார். ஒரு நல்ல ஆட்சியாளரின் செயல்பாடுகளுக்கான புதிய சிலபஸையே உருவாக்கியிருக்கின்றார்..!

தன்னுடைய நெஞ்சுக்கு நீதியுடன், நேர்மையுடன் மக்களுக்காக திட்டங்களை தீட்டி ஆண்டு கொண்டிருக்கின்றோம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்த காரணத்தினால் தான்...

தன் கட்சித் தோழர்களை... இல்லந்தோறும் செல்லுங்கள்... என்னுடைய குரலாக ஒவ்வொரு குடும்பத்தினரிடமும், நாம் இரண்டரை ஆண்டு காலத்தில் செய்த சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள்... இதற்கு மேல், அவர்களுக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றதோ அதை எழுத்திக் கொண்டு வாருங்கள்... அவற்றையும் படிப்படியாக தீர்த்து வைப்போம் என்று தைரியமாக அவரால் சொல்ல முடிந்திருக்கின்றது..!

எந்தவொரு அரசனுக்கு மக்களை சந்திக்கும் தைரியம் இருக்கின்றதோ, அப்படி சந்திக்கும் போது... மக்கள் அவரை கரித்துக் கொட்டாமல், கரிசனத்தோடு வாழ்த்தும் நிலை இருக்கின்றதோ... அந்த அரசன் தான், அந்த நாடு என்ற நிலப்பரப்பை மட்டுமல்லாது... அந்த நாட்டில் வாழும் குடிமக்களின் மனங்களையும் வென்ற சக்கரவர்த்தியாகின்றார்...!

அந்த வகையில் தலைவர் தளபதியார், தமிழ்நாட்டின் சக்கரவர்த்தியாக திகழ்கின்றார்...!

எவனெவனோ... ஊடகவியலாளர், அரசியல் விமர்சகர் என்ற பெயர்களில் நான்கு சுவற்றுக்கு உள்ளே ஏசியை போட்டு உட்கார்ந்து கொண்டு, கேமரா முன்பாக தலைவரையும், இந்த ஆட்சியையும் பற்றி குறை கூறிக்கொண்டு திரிவதைக் கண்டால், இப்ப சிரிப்புத்தான் வருது..!

எங்களைப் போன்றவர்களுக்கு எல்லாம், மக்களை நேரடியாக சென்று பார்த்துப் பேசியபின்பாக வரும் அந்த பெருமிதம், தலைவருக்கு ஏற்கனவே நன்றாக தெரிந்திருக்கின்றது. காரணம் அவர் தானே மக்கள் இடத்திலிருந்து சிந்தித்து சிந்தித்து... பார்த்துப் பார்த்து ஒவ்வொரு திட்டமாக தீட்டியிருக்கின்றார்..!

அதனால் தான் அவர் இந்த சில ஊடக புரோக்கர்களின் தரம்கெட்ட விமர்சனங்களை கொஞ்சம் கூட மதிக்காமலேயே கடந்து போகின்றார் போலும்..! மக்களை பார்த்துப் பேசி விட்டு வந்த பிறகு எங்களைப் போன்ற கட்சியினருக்கும் கூட அந்த புரோக்கர்களைக் கண்டால் நகைத்துக் கொண்டே கடக்கத் தான் தோன்றுகிறது..!

தலைவர் தளபதியார்... அனைத்து நிலைகளையும் கடந்து நிற்கின்ற அரசியல் ஞானியாகவே எனக்கு காட்சி தருகின்றார்..!



**சௌமியன் வைத்தியநாதன்**
**எழுத்தாளர்**

---

சீர்காழி ரயில் நிலையத்தில்

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - நிவேதா முருகன் தலைமையில் திரண்டனர்!

மயிலாடுதுறை, மார்ச் 5 -

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் திறப்பு விழாவிற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சீர்காழி ரயில் நிலையத்தில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு வரவேற்பளித்தனர் .

கழகத் தலைவர், திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மயிலாடுதுறையில் ரூ. 114.48 கோடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் மற்றும் மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்ற மயிலாடுதுறைக்கு சென்னையில் இருந்து 3ம் தேதி மாலை திருச்செந்தூர் எக்ஸ்பரஸ் ரயிலில் புறப்பட்டு இரவு 8.35 மணிக்கு சீர்காழி ரயில் நிலையம் வந்தடைந்தார்.

சீர்காழி ரயில் நிலை யத்தில் மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன் தலைமையில் மேள தாளம் முழங்க மாபெரும் வரவேற்பு வழங்கப்பட்டது .

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ வீ மெய்ய நாதன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி. மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, உடன் இருந்தனர். வரவேற்பு நிகழ்ச்சியில் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், கழக உயர் நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மாநில விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரபாண்டியன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் குத்தாலம் க அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள் செல்வம்,

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் பி சத்தியசீலன். ஏ.சி.என். விஜயபாலன், எம் எம் சித்திக், எம். பன்னீர்செல்வம், மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி, இராம. இளங்கோவன், முத்து.மகேந்திரன், மாவட்ட கழக அவைத் தலைவர் கே.ஜி. சீனிவாசன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி கண்ணகி பன்னீர், பொருளாளர மகா. அலெக்சாண்டர் தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டலம் பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், ஒன்றிய கழக செயலாளர் செல்ல சேது ரவிக் குமார், மலர்விழிதிருமாவளவன், ஏ.ஜி ஜெ பிரபாகர் பஞ்சு குமார், பி,எம். அன்பழகன், எம்.அப்துல் மாலிக், அமிர்த விஜய குமார், என்.இளையபெருமாள், ஞான. இமயநாதன், ப.முருகமணி, என். மூவலூர்.மூர்த்தி, மங்கை எம். சங்கர், கு.வைத்தியநாதன், ஏ ஆர் ராஜா நகரம் கழக செயலாளர்கள் ம. சுப்பராயன், குண்டாமணி (எ) என்.செல்வராஜ்,

மாவட்ட ஊராட்சி தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ். சங்கரநாராயணன், ஜெ கபிலன், சுபா நெடுஞ்செழியன், ஹர்ஷத், எஸ். சுவாமிநாதன், பி.கென்னடி, அ.காந்தி, எஸ்.வெற்றிவேல், நத்தம் ஏ.வின்சென்ட், பேரூர் கழக செயலாளர் எம்.சம்சுதீன் எம்.அன்புச்செழியன், என்.அண்ணாதுரை, எஸ். கே.முத்துராஜா, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, காழி..கலைவாணன், பிரபாகர், வெடி.பாலமுருகன்,

இரா.மனோகர், வி. எஸ்.என்.செந்தில், ஆர். முருகன், ஆர்.தன்ராஜ், டி.ராஜ்குமார், சாந்தி, தீபா சத்தியேந்திரன், அறிவு (எ) அறிவழகன், எஸ்.பாலாஜி, கே விக்னேஷ், எம்.எஸ். முத்துகுபேந்திரன், ஆர். முருகன், வை. சௌமியன், இரா. முருகப்பா, காளி. தேசப்பன், ஆர்.எஸ்.ஶ்ரீதர், வைத்தியநாதன், டி. ராஜ் குமார், சீர்காழி நகர மன்ற தலைவர் துர்க்கா பரமேஸ்வரிராஜசேகர்,

ஒன்றிய குழு தலைவர்கள் மகேந்திரன், ஜெயபிரகாஷ், கமலஜோதி தேவேந்திரன், காமாட்சி மூர்த்தி, நந்தினிஶ்ரீதர், பேரூராட்சி தலைவர்கள் பூங்கொடி அலெக்சாண்டர், சுகுணா சங்கரிகுமரவேல், சங்கீதா மாரியப்பன், கண்மணி அறிவழகன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள் தியாக. விஜயஸ்வரன், க.சுரேஷ் அரசு வழக்கறிஞர் இராம. சேயோன். தணிகை பழனி, அருள்தாஸ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கோசி. எம். திருமாவளவன், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் சீர்காழி ரயில் நிலையம் முதல் திருவெண்காடு வரை வழியில் நின்றுகழகத் தலைவர் வாழ்க, தளபதி வாழ்க , திராவிட மாடல் முதல்வரே வருக! வருக! எனக் கூறி உற்சாக வரவேற்பளித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் – கழக தலைவர் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பாக கிழக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.பி.கௌதம் ஏற்பாட்டில் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ சுப்ரமணி தலைமையில் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் டாக்டர்.ஏ.கே.தருண்,மற்றும் நகர கழக செயலாளர் நாட்டான் மாது முன்னிலையில் 11 வது வார்டில் கழகக் கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கி, 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் உதயசூரியன்,ஜெ. ராஜேஷ், ஈஸ்வரன்,ரகு, கவின்குமார், முருகவேல், முனியப்பன், காயத்ரி, தேன்மொழி, புவனேஸ்வரி, பிரவீன் கன்னியப்பன், சுப்பிரமணி மற்றும் மாநில,மாவட்ட, நகர,கழக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

சாலை விபத்தில் - பீளமேடு பகுதி - 27வது வார்டு செயலாளர்

## சபரி தன்ராஜ் - மனைவி பாக்கியலட்சுமி பலி!

### கோவை நா.கார்த்திக் - இளஞ்செல்வி கார்த்திக் அஞ்சலி!

கோவை, மார்ச் 5 -

கோவை மாநகர் மாவட்டம்,பீளமேடு பகுதிக்கழகம் 1,வார்டு எண்:27 செயலாளர் சபரி தன்ராஜ் மற்றும் அவர் மனைவி பாக்கியலட்சுமி ஆகிய இருவரும் சனிக்கிழமை இரவு சாலை விபத்தில் மறைவெய்தினர் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து அன்னாரது இல்லத்திற்கு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் முன்னாள் எம்.எல்.ஏ., கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவர் இளஞ்செல்வி கார்த்திக் நேரில் சென்று அன்னாரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி , அவரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்தனர்.

மேலும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.மணிகண்டன்,பகுதிச் செயலாளர்கள் துரை.செந்தமிழ்செல்வன்,மா.நாகராஜ்,மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால், மாமன்ற உறுப்பினர்கள் அம்பிகா தனபால், சித்ரா வெள்ளிங்கிரி, வட்டக்கழகச் செயலாளர்கள் கி.நாராயணன்,ஆ.மாடசாமி, ப. மோகன்ராஜ்,கே.ஆனந்த குமார், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் திரளான பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அன்பில் தர்மலிங்கம்

**மார்ச் 5 (1993)**



நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய இயக்கங்களில் பங்கு கொண்டதன்றி தி.மு.க. உருவானபோது கழகத்தில் முக்கிய பங்கேற்று பணியாற்றினார்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

திருச்சி மாவட்டச் செயலாளராக 1950 முதல் 1972 வரை பணியாற்றினார்.

திருச்சி மாவட்டத்தில் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. 2வது மாநில மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக பணியாற்றியவர்.

மாநாட்டிற்கு கழகத்தவரை அண்ணா வருமாறு அழைப்பு விடுக்கும்போது அதற்காக திராவிட நாடு இதழில் எழுதிய தம்பிக்கு மடலில் "அன்பில் அழைக்கிறார்" என்றே தலைப்பிட்டு எழுதினார்.

சட்டமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.

தலைமைக் கழகச் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் 1986ஆம் ஆண்டு "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

தமிழ்நாட்டில் 'திராவிட மாடல்' ஆட்சியில் – மோடியின் பொய்கள் ஒருபோதும் எடுபடாது!

# நம் தலைவர் யாரை கைகாட்டுகிறாரோ, அவர்தான் நாளைய பிரதமர்!

## மதுரை – ஆரப்பாளையத்தில் தயாநிதி மாறன் எம்.பி. பேச்சு!

**மதுரை, மார்ச் 5– திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் மோடியின் பொய்கள் எடுபடவில்லை என்று மதுரை பொதுக்கூட்டத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பேசினார்.**

மதுரை மாநகர் மாவட்டம், ஆரப்பாளையம் 1ம் பகுதி தி.மு.க. சார்பில் "எல்லோருக்கும் எல்லாம்" என்ற தலைப்பில் ஆரப்பாளையம் கிராஸ் ரோட்டில் நடைபெற்ற, கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் மற்றும் நிதி நிலை அறிக்கையின் விளக்கப் பொதுக்கூட்டத்தில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், இந்த ஆண்டின் தமிழ்நாட்டு நிதி நிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள் குறித்தும், வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க வை புறந்தள்ளி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்றும் உரையாற்றினார்.

அவரது பேச்சு வருமாறு:-

2021 ஆம் ஆண்டு நடந்த தேர்தலிலே தமிழ்நாட்டு மக்கள் ஒரு மாபெரும் புரட்சியைச் செய்தார்கள், 10 ஆண்டுகளாக தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை முதலமைச்சராக ஆக்கினார்கள், அன்று முதல், பின்தங்கிய நிலையில் இருந்த தமிழ்நாடு முன்னேற ஆரம்பித்தது. நமது தலைவர் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஒரு பெரிய சோதனை வந்தது, அது என்னவென்றால் கொரோனா பெருந்தொற்று, இதனால் தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா மட்டுமல்ல, உலகமே பாதிக்கப்பட்டது. ஆனால் கொரோனா காலத்திலே, யாருக்கும் அஞ்சாமல், தன் உயிருக்கும் அஞ்சாமல், அவரே ஒரு முன்கள வீரர் போல் அந்த கொரோனோ வார்டுக்குள் நேராகச் சென்று மக்களை சந்தித்து நலம் விசாரித்து, தமிழ்நாட்டையும், தன் மக்களையும் காப்பாற்ற வேண்டும் என ஒரு மாவீரனைப் போல் செயல்பட்டவர். அதுமட்டுமல்லாது இன்று நாம் அனைவரும் கொரோனாவிலிருந்து தப்பித்து உயிருடன் இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் நம் தலைவர் தளபதி அவர்கள் தான். இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்றால், கொரோனா வந்தவுடன் மற்ற மாநிலங்களில் எந்த முதலமைச்சரும் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. எல்லோரும் வீட்டுக்குள்ளே இருந்து தங்களை தற்காத்துக் கொண்டார்களே தவிர, மக்களைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை.

### மதுரை மாவட்டத்துக்கு அள்ளித் தந்த திட்டங்கள்!

நமது தலைவர் 2021ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு மதுரை மாவட்டத்திற்கு அள்ளித் தந்த திட்டங்களைப் பாருங்கள், நாடே போற்றும் கலைஞர் நூற்றாண்டு நூலகம், அலங்காநல்லூரில், கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் கட்டிமுடித்து அதில் முதல் போட்டியும் நடைபெற்றுவிட்டது, கீழடி அருங்காட்சியகத்தை அமைத்துத் தந்துள்ளார், ஒட்டுமொத்த மதுரையின் வளர்ச்சிக்காக மதுரை நகர வளர்ச்சிக் கழகம் - தமிழ்நாட்டிலேயே 4வது நகர வளர்ச்சிக் கழகமாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகளும், ஏற்கனவே தீ விபத்தினால் சேதமடைந்த வீரவசந்தராயர் மண்டபத்தை ரூ. 18 கோடி செலவில் புனரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

அதுமட்டுமல்லாது தற்போது நடந்து முடிந்த சட்டமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் மதுரை மாவட்டத்திற்கு புதிதாக வரவிருக்கும் திட்டங்கள் குறித்து நிதியமைச்சர் அறிவித்த பட்டியலைப் பாருங்கள், மதுரையில் மெட்ரோ ரயில் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, பணி புரியும் பெண்களுக்கு "தோழி விடுதி", தொழில் புத்தாக்க மையம் அமைக்க 24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, உலகளாவிய திறன் மேம்பாட்டு மையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது, திருப்பரங்குன்றம், திருநீர்மலை மலைகோவில்களில் ரூபாய் 26 கோடி செலவில் ரோப் கார் வசதி, மேலும் நமது கழகத்தின் எதிர்காலம், தமிழகத்தின் வருங்காலம், நமது விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் துறையின் சார்பாக மதுரையில் ஒலிம்பிக் வீரர்களை உருவாக்கும் வகையில் ஒலிம்பிக் பயிற்சி மையங்கள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், கடந்த அதிமுக ஆட்சி காலங்களில் இந்த அடிமைகள் நம்மை விற்றுவிட்டார்கள். இன்று முக்கிய பிரச்னை என்னவென்றால், வரவிருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலை கருத்தில் கொண்டு மக்கள் எல்லாம் திசை திருப்பப்படுகிறார்கள், தொலைக்காட்சியில் ஒவ்வொரு பத்து நிமிடங்களுக்கும் வட இந்திய மக்களுக்காக வட இந்தியர்களை வைத்து நமது இந்திய அரசின் நிதியில் மோடி கேரண்டி என்று தயாரிக்கப்பட்ட விளம்பரத்தை ஒளிபரப்புகிறார்கள். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அவர்களுக்கு தமிழ் மக்களின் மீது துளியும் அக்கறையில்லை.

### பொய் பேசி மக்களை கவர நினைக்கும் மோடி!

நான் பாராளுமன்றத்தில் பேசியிருந்தேன், மோடி அவர்கள் ஒவ்வொரு முறை தமிழ்நாட்டிற்கு வரும்போதும் தமிழ்மீது பெருங்காதல் கொண்டதுபோல் ஏதாவது ஒரு திருக்குறளைப் பேசுவார். இதைப் பார்த்து சிலர் இவர் எப்படி இவ்வளவு நன்றாக தமிழ் பேசுகிறார் என்று கேட்பார்கள். மக்களே நீங்கள் சற்று உற்று கவனித்தால், அவர் பேசும்போது பக்கத்தில் 2 ஸ்டான்டு வைத்திருப்பார்கள், அதுதான் டெலிப்ராம்ப்ட் (Tele Prompt) என்பார்கள், அதில் தமிழ் வார்த்தைகளை இந்தியில் வைத்துப் பார்த்து பேசி நம்மை ஏமாற்றுவார். அது மட்டுமல்லாது நம் தமிழ்நாட்டிற்கு வந்தால், தமிழ்நாடு எனக்கு பிடித்த ஊர், தமிழர்கள் எனக்கு பிடித்தவர்கள், தமிழ் மொழி எனக்கு பிடித்தமான மொழி என்பார், அப்படியே கேரளா போனால், மலையாளம்தான் எனக்கு பிடித்த மொழி என்பார், அதே போல், கர்நாடகா, ஆந்திரா சென்றால், கன்னடமும், தெலுங்கும் எனக்கு பிடித்த மொழி என்று இடத்திற்கேற்றார் போல் பொய் பேசி மக்களை கவர முயற்சி செய்வார்.

இதைக் குறிப்பிட்டுதான் பாராளுமன்றத்தில், நான் பின்வருமாறு பேசியிருந்தேன், கோழி பிடிப்பவன் எப்படி, பக் பக் என்று கத்தி கோழியை பிடித்து வறுத்துவிடுவானோ, அதே போல்தான் மோடியும் நம் மொழியில் பேசி, நம்மை ஏமாற்றி, நம் வாக்குகளை களவாட முயற்சிக்கிறார்.

மோடி அவர்களே, நீங்கள் தமிழ்மொழியை மதிக்கிறேன், வள்ளுவரை வணங்குகிறேன் என்றெல்லாம் சொல்கிறீர்களே, இந்தியாவின் முதல் செம்மொழியாம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இதுவரை நீங்கள் என்ன செய்தீர்கள்? தமிழ் மொழிக்கு பிறகுதான் சமஸ்கிருதம் செம்மொழி அந்தஸ்து பெற்றது. அப்படி இருக்கையில் சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கு ஆண்டுக்கு கிட்டத்தட்ட ரூ.1500 கோடி செலவு செய்கிறீர்கள், ஆனால் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வெறும் 28 கோடி தான் செலவு செய்கிறீர்கள். யாருமே பேசாத சமஸ்கிருத மொழிக்கு 1500 கோடிகள், ஆனால் உலகமெல்லாம் பேசக் கூடிய தமிழ் மொழிக்கு வெறும் 28 கோடிதான். சிங்கப்பூர் சென்றால், அங்கு தமிழ் ஆட்சி மொழி, மலேசியா, இலங்கையெல்லாம் சென்றால் அங்கு கிட்டத்தட்ட தமிழ் ஆட்சி மொழிதான், அங்கெல்லாம் தரப்பட்ட அங்கீகாரத்தை, இங்கு நம் இந்தியாவிலும் தமிழை ஆட்சி மொழியாக அறிவித்துத் நீங்களும் தரலாமே. ஆனால் நீங்கள் அதை செய்வதில்லை. ஏனென்றால் நீங்கள் தமிழ்நாட்டு மக்களை மதிப்பதில்லை. இந்தியாவிலேயே தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை முதன்முதலாக பெற்றுத் தந்தவர் நமது தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை இங்கு பெருமையோடு உங்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

இங்கு தமிழ்நாட்டில் நாம் அனைத்து மதங்களையும் மதிக்கிறோம், எம்மதமும் சம்மதம் என வாழ்கிறோம். இதைத்தான் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களெல்லாம் நமக்கு சொல்லித்தந்திருக்கின்ற தாரக மந்திரம். நமக்குள் இன்னார் முஸ்லீம், இன்னார் கிருத்துவர், இன்னார் இந்து என்று பிரிவினையே கிடையாது, ஆனால் பாஜக என்ன செய்கிறது, மற்ற மதங்களின்மீது வெறுப்புணர்வை ஏற்படுத்தி வெறுப்பரசியலை முன்னெடுக்கிறது. அதை தமிழ்நாட்டு மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அதுமட்டுமல்ல இந்தி மொழியை மட்டும் படித்தால்போதும் எனவும், இந்தியா என்பது இந்தி பேசுகின்ற மக்களுக்கு மட்டும் தான் என்பது போல எங்கள் தமிழர்களிடையே இந்தி மொழியை திணிக்கிறீர்கள். நாங்கள் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல, நாங்கள் சொல்வதெல்லாம், எங்கள் தாய்மொழியை மதிக்கிறோம், நேசிக்கிறோம், அதேபோல் எங்களுக்கு தேவைப்பட்டால், எங்களுக்கு தேவையான எந்த மொழியானாலும் அந்த மொழியை கற்றுக் கொள்வோம், அது எங்கள் உரிமை. ஆனால் இந்தி மொழியை கட்டாயம் படிக்க வேண்டும் என நீங்கள் திணிக்க வேண்டாம்.

வட இந்தியாக்களில் பலபேர் மோடி அவர்களின் பேச்சைக் கேட்டு இந்தி மொழி மட்டும் படித்து ஆங்கிலத்தை படிக்காமல் விட்டனர். அதனால் இன்று அவர்கள் பல்வேறு இன்னல்களை அனுபவிக்கின்றனர். ஆனால் நாம், தமிழ்மொழியோடு ஆங்கிலத்தையும் சேர்த்து படித்ததனால் முன்னேறி வருகிறோம், அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு, கூகுள் நிறுவனத்தின் தலைவர் சுந்தர் பிச்சை அவர்கள், அவர் தமிழும் படித்தார், ஆங்கிலமும் படித்தார். அதே போல் இன்று உலகத்தில் தலைசிறந்த நிறுவனங்களில் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் தமிழர்கள்தான். காரணம் நாம் தமிழையும் ஆங்கிலத்தையும் சேர்த்து படித்ததனால் தான். இதைத்தான் நான் ஐந்து வருடங்களுக்கு முன் குறிப்பிட்டு பேசியிருந்தேன்.

பத்து ஆண்டுகளாக ஒன்றியத்திலே பாஜக ஆட்சியை நடத்தி வருகிறது. பத்து ஆண்டுகளில் பாஜகவினர், உங்கள் சாதனை என்று நீங்கள் எதை சொல்வீர்கள்,

ஒவ்வொரு நபருக்கும் 15 லட்சம் என்று சொன்னாரே, தந்தாரா?

### துக்ளக் தர்பார்!

அதுமட்டுமா, துக்ளக் தர்பார் என்று சொல்வார்களே, முந்தைய நாள் இரவில் தோன்றுவதையெல்லாம், அதுகுறித்து எதையும் சிந்திக்காமல் அடுத்த நாள் அறிவிப்பார்கள். அது போல்தான், பணமதிப்பிழப்பு என்ற ஒரு பெரும் நிகழ்வை யாரிடமும் கலந்தாலோசிக்காமல் இரவோடு, இரவாக அமல்படுத்தினார் மோடி அவர்கள்.

இதனால் அதிகம் பாதிக்கப்பட்டது தாய்மார்கள் தான், ஏனெனில் அவர்கள் தான் வீட்டில் அங்குமிங்கும் சிறுகசிறுகச் சேமித்து வைத்திருப்பார்கள்.. இதை வைத்து கோயம்புத்தூரில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை உங்களுக்கு கூறுகிறேன். "கோயம்புத்தூரில் ஒரு விவசாயி தன் மனைவியிடம் சென்று நான் ஒரு டிராக்டர் வாங்க வேண்டும், 15 லட்சம் அதன் மதிப்பு, உன்னிடம் எதாவது பணம் இருந்தால் கொடு, என்று கேட்கிறார். அதற்கு அந்த மனைவி அவரிடம், 'கோவத்துடன் நானே நாளைக்கு சமையலுக்கு காசில்லாமல் என்ன பன்றதுன்னு யோசிச்சிட்டு இருக்கேன், நீ வேற வேலை இல்லாம எதாவது பேசிக்கிட்டு என்று கடிந்து கொண்டார்'. அதனால் அந்த விவசாயியும் வருத்தப்பட்டார், வருத்தத்துடனே தொலைக்காட்சியை பார்க்கும் போது, பணமதிப்பிழப்பு செய்தி, உடனே அந்த மனைவி ஓடி போய் 20 லட்சம் பணத்தை எடுத்து மாற்றி வாருங்கள் என்று சொல்கிறார். உடனே அவர் இப்போதான் பணம் இல்லை என்று சொன்னாயே என்று கேட்டபோது, இது என் அண்ணன் பணம் என்று சமாளித்தார்". இதில் நாம் சிந்திக்க வேண்டியது என்னவென்றால், இதன் மூலம் நாம் எப்படியெல்லாம் வரிசையில் நின்று கஷ்டப்பட்டோம், நாம் சம்பாதித்த பணத்தை, நம் சொந்த பணத்தை நாம் பெறுவதற்கு நம் வேலையையெல்லாம் விட்டு விட்டு வரிசையில் நின்று அவதிப்பட்டோம், அதில் எத்தனை உயிர்கள் போனது. இதற்கெல்லாம் யார் பொறுப்பு?

உடனே மோடி எனக்கு மூன்று மாதங்கள் தாருங்கள், நான் கருப்புப் பணத்தையெல்லாம் மீட்டுக் கொண்டு வருவேன் என்றார். எவ்வளவு கருப்புப் பணத்தை கொண்டு வந்தார். ஒரு ரூபாய் கூட கருப்புப் பணத்தை மீட்கவில்லை. அதுமட்டுமல்ல 1000 ரூபாய், 500 ரூபாய் நோட்டுகளை எல்லாம் மாற்றி, 2000 ரூபாய் நோட்டை கொண்டு வந்தார்களே, இன்று 2000 ரூபாய் நோட்டு எங்கே போனது?

எப்படியெல்லாம் நம்மை ஏமாற்றி இருக்கிறார்கள் என்று எண்ணிப் பாருங்கள், அதுமட்டுமா? கொரோனா நேரத்தில் வந்து மணி அடியுங்கள், ஒலி எழுப்புங்கள் என தட்டுகளை தட்ட விட்டாரே, இந்தி மொழிக்காக உயிரையும் விடுவேன் என்று சொல்கிறவர், கொரோனா காலத்தில் இரவோடு இரவாக இரயிலை நிறுத்தியதால் வடஇந்திய தொழிலாளர்கள் எல்லாம் நடந்தே சென்றார்கள், அப்படி நடந்து சென்று எத்தனை தொழிலாளர்கள் உயிரிழந்தார்கள் என்ற கணக்கு யாரிடமும் இல்லை.

சீனாவில் இருந்த கொரோனா இந்தியாவிற்குள் எப்படி வரும், விமான நிலையங்களின் வாயிலாகதான் வரும், அப்படி இருக்கையில் பாஜகவினர் விமான நிலையத்தை மூடாமல் இருந்தனர். ஏனென்றால் அப்போது குஜராத் மாநிலத்தில் தேர்தல், அதற்காக அமெரிக்க பிரதமரை வரவேற்பதற்காக "நமஸ்தே ட்ரம்ப்" என்று சொல்லி அனைத்து விமான நிலையங்களையும் திறந்து வைத்திருந்தார். டிரம்ப் குஜராத்தில் இருந்து சென்றவுடன் விமான நிலையங்களை மூடினார். அதற்குள் கொரோனா பரவ ஆரம்பித்து பல உயிர்களை பலி வாங்கியது.

அடுத்ததாக, அரசியல் கட்சிகளிடமிருக்கும் கருப்புப் பணத்தை ஒழிப்பதாக சொல்லி, தேர்தல் பத்திரம் என்ற முறையை அறிமுகப்படுத்துகிறார் மோடி, அது என்னவென்றால், ஸ்டேட் பாங்கிலிருந்து (state bank) நீங்கள் ஒரு பத்திரம் வாங்கிக் கொள்ளலாம், அந்த பத்திரத்தின்மூலம் எவ்வளவு பணத்தை வேண்டுமானாலும், நீங்கள் எந்த கட்சிக்கு வேண்டுமானாலும் தரலாம், யார் எவ்வளவு தந்தார்கள் என்று யாருக்கும் வெளியே தெரியப்படுத்தத் தேவையில்லை. இதன்மூலம் ரூ. 6800 கோடி என அதிகம் பணம் பெற்றது பாஜக கட்சிதான். இது கிட்டத்தட்ட லஞ்சம் கொடுப்பதற்கு சமம்தான், இதில் வெளிப்படைத்தன்மை தேவை என்று இந்த தேர்தல் பத்திரத்தை எதிர்த்து, ஒருவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதை விசாரித்த உச்ச நீதிமன்றம் வருகின்ற மார்ச் 31ஆம் தேதிக்குள் யார் யார் எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்ற தகவலைத் தெரிவிக்க வேண்டும் என தீர்ப்பளித்துள்ளது.

### ஏர்இந்தியா நிறுவனம் விற்பனை!

அம்பானி, அதானி, டாடா போன்றோர் இந்தப் பத்திரங்கள் மூலம் பணம் கொடுத்துள்ளனர். டாடா நிறுவனம் எதற்கு கொடுத்தது, ஏர் இந்தியா நிறுவனத்தை டாடா நிறுவனம் வெறும் 16000 கோடிக்கு வாங்குகிறார்கள், ஆனால் ஏர் இந்தியா நிறுவனத்திற்கு கடன் மட்டும் 65000 கோடி. டாடாவிற்கு ஏர் இந்தியா நிறுவனத்தை விற்றுவிட்டு அந்த மீதிக் கடனையும் நாம் தான் அடைத்தோம். நம் வரிப்பணத்தில் இருந்து 65000 கோடி கடனை இந்திய அரசு அடைத்துள்ளது. இப்படி சலுகைகள் கொடுத்தால், அவர்கள் இதுபோன்ற பத்திரங்கள் மூலம் அள்ளிக் கொடுக்கத் தான செய்வார்கள்,

இன்றைக்கு கிட்டத்தட்ட 80 சதவீதம் துறைமுகம் தனியார் வசமிடமுள்ளது. அந்தத் தனியார் வேறு யாரும் இல்லை. அதானிதான். இன்று அதானி நினைத்தால், எந்தப் பொருளும் கடல் வழியாக நாட்டிற்குள் உள்ளே வரலாம், கடல் வழியாக வெளியே போகலாம். இப்படித்தான் அதானிக் கட்டுப்பாட்டில் உள்ள குஜராத் துறை முகத்தில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் கோடி மதிப்பிலான போதை பொருட்கள் வந்து கொண்டிருக்கின்றது. இதை வைத்து, நான் இதில் அதானிக்கு தொடர்பிருப்பதால், இதன்மூலம் மோடிக்கும் தொடர்பிருக்கு என்று சொல்ல முடியுமா? நாங்கள் அப்படி சொல்ல மாட்டோம், மக்கள் பார்வைக்கே விட்டுவிடுகிறோம். இப்படித்தான் நாட்டின் பொது நிறுவனங்களையெல்லாம் ஒவ்வொன்றாக விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ரஷ்ய போரிலே பெட்ரோல் விலை ஏறியது. அப்போது ரஷ்ய நாட்டினர் இந்தியாவிடம், நாங்கள் உங்களுக்கு பெட்ரோலை குறைந்த விலையிலே, அதாவது மானிய விலையிலே தருகிறோம் என்றனர். அதாவது நாம் அரபு நாடுகளில் ஒரு டீப்பாய் 120ரூபாய்க்கு பெறுகிறோம் என்றால் அதையே ரஷ்யா நமக்கு 65 ரூபாய்க்கு தந்தது. இதன் மூலம் மக்களாகிய நமக்கு பெட்ரோல் விலை குறைந்திருக்க வேண்டுமல்லவா? ஆனால் குறையவில்லை. ஏன் தெரியுமா, அந்த பெட்ரோலை இறக்குமதி செய்வது அம்பானி மற்றும் அதானி நிறுவனங்கள், அப்படி இறக்குமதி செய்த பெட்ரோலை இந்தியாவிற்கு கொடுக்காமல், ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பல்லாயிரக்கணக்கான கோடிகளில் கொள்ளை இலாபம் சம்பாதித்தனர். 2014 ஆம் ஆண்டுகளில் பெட்ரோல் விலையை குறைப்பேன் என்று சொன்னார் மோடி, இன்று பெட்ரோல் விலை 100 ரூபாய்க்கும், டீசல் விலையும் கிட்டத்தட்ட 100 ரூபாயை எட்டியுள்ளது.

2014 ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில், கேஸ் விலையை குறைப்பேன் என்றார் மோடி, ஆனால் 400 ரூபாயில் இருந்த கேஸ் விலை இன்றைக்கு கிட்டத்தட்ட 1000 ரூபாயை நெருங்கியுள்ளது.

பாஜகவினர் என்னென்னமோ வாக்குறுதிகளை தருகிறார்களே இந்த பெட்ரோல் விலையையும், டீசல் விலையையும் குறைப்பேன் என்று வாக்குறுதியை தரச் சொல்லுங்களேன் பார்க்கலாம்.

சென்னையில் சமீபத்தில் பெரும் வெள்ளம் வந்தது, வரலாறு காணாத வெள்ளம், ஒவ்வொரு மக்கள் பிரதிநிதிகளும், தி.மு. கழகத்தினரும் மக்களுக்கு சேவையாற்றினர். தரைத்தளத்தில் உள்ள பெரும்பாலான வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துவிட்டது. அதனால் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். இதனைக் கருத்தில் கொண்டு நம் முதல்வர் அவர்கள் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ரூ.6000 நிவாரணமாக அறிவித்தார். அதற்காக ஒன்றிய அரசிடம் நிவாரணமாக நிதி கேட்டபோது. ஒன்றிய அமைச்சர்கள் வந்தார்கள், ஆய்வு மேற்கொண்டார்கள், அவ்வளவுதான், ஒரு ரூபாய் கூட தரவில்லை. பொறுத்து பொறுத்து பார்த்த நம் முதல்வர் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக தந்தால்தான் அவர்களுக்கு அந்த நிவாரணம் பயனளிக்கும் என்று நமது மாநிலத்தின் மூலம் நிதி ஒதுக்கி அவர்களுக்கு நிவாரணம் வழங்கினார்.

அடுத்தப்படியாக தூத்துக்குடியிலும் வரலாறு காணாத வெள்ளம், எனக்கு தெரிந்தவரையும், எங்கள் கழகத்தின் மூத்தவர் பொன். முத்துராம லிங்கம் அண்ணன் இங்கு இருக்கிறார், அவருக்கும் தெரிந்தும் இது போன்ற மழை பெய்ததில்லை. இதற்கும் ஒன்றிய அரசிடம் நிதி கேட்டோம், அப்போதும் ஒரு ரூபாய் நிதி தரவில்லை. இதற்கும் நம் மாநில அரசின் நிதியிலிருந்துதான் நிவாரணம் அளித்துள்ளோம், கிட்டத்தட்ட 35000/ கோடி ரூபாய் நிவாரணம் வழங்கியுள்ளோம்.

இன்று அப்பளம், பாக்கு என எதற்கெடுத்தாலும் ஜி.எஸ்.டி. வரி வசூலிக்கின்றனர். ஆனால் நமது பேரிடர் காலங்களில் நிதி கேட்டால், ஒரு பைசா கூட தருவதில்லை. இதில், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் ஏளனமாக, தமிழ்நாடு அரசு எங்களை ஏடிஎம் மெஷின் என்று நினைக்கின்றனர் என பேசினார்.

இதைத்தான் நம் இளந் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டித்து உங்க வீட்டு காசையா கேட்டோம், அல்லது உங்கள் அப்பா வீட்டு காசையா கேட்டோம், நாங்கள் செலுத்தும் வரிப் பணத்தைத் தானே கேட்கிறோம் என சொன்னார்.

உடனே அந்த அம்மா பத்திரிகையாளர்களை அழைத்து பேட்டி கொடுக்கிறார்கள், உதயநிதி அவர்களுக்கு மரியாதை தெரிய வேண்டும், அப்பா வீட்டு காசு, ஆத்தா வீட்டு காசு என்றெல்லாம் பேச கூடாது என்று கூறி அலட்சியப்படுத்தினார்.

இதை குறிப்பிட்டு நான் பாராளுமன்றத்தில், ஏன் இப்படி வன்மமாக பேசுகிறீர்கள், நாங்கள் திருப்பி உங்கள் தோப்பனார் வீட்டு காசா என்று கேட்டால் நல்லா இருக்குமா என்று கேட்டேன். ஒரு பதில் கூட இல்லை.

ஒன்றிய அரசிற்கு நம் தமிழ்நாடு அரசு வரிப்பணமாக ஒரு ரூபாய் கொடுத்தால், ஒன்றிய அரசு நமக்கு திருப்பித் தருவது 28பைசா தான். ஆனால் இதுவே உத்தரபிரதேசத்திற்கு ஒரு ரூபாய் கொடுத்தால், ஒன்றிய அரசு அவர்களுக்கு திருப்பி 4 ரூபாய் தருகிறார்கள், அதுபோல் தான், பீகாருக்கு 7 ரூபாய். இப்படி நம் பணத்தை வரியாய் பெற்று மற்ற மாநிலங்களுக்கு வாரி வழங்குகிறார்கள், ஆனால் நமக்கு பேரிடர் நாட்களில் கூட நிவாரணம் வழங்க நிதி தருவதில்லை. ஏனென்றால், மோடி அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் மீது அக்கறையில்லை.

தற்போது, சென்னை, தூத்துக்குடி எல்லாம் பிரதமர் வந்தாரே, அப்போதாவது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை அறிவித்திருக்கலாமே, ஆனால் ஒன்றுமே செய்யவில்லை.

மக்கள் ஜனத்தொகையை வைத்து நாடாளுமன்றத் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்யப் போகிறார்களாம் இந்த பாஜகவினர். இதன்மூலம் உத்தரப்பிரதேசத்தில் தற்போது இருக்கு 80 தொகுதிகள் 120 ஆக அதிகரிக்கும், நம் தமிழ்நாட்டிற்கு 40 தொகுதிகள் 30 ஆக குறையும்.

ஒன்றிய அரசு அன்று கொண்டு வந்த நாம் இருவர் நமக்கு இருவர் போன்ற திட்டங்களை முறையாக பின்பற்றி மக்கள் தொகையை கட்டுப்பாட்டில் வைத்ததற்கு நமக்கு இது தேவையா?

### படிக்க வைப்பது திராவிட ஆட்சி!

தமிழ்நாட்டில் ஏன் மோடி பொய்கள் எடுபடவில்லை என்றால். அதற்கு காரணம் தந்தை பெரியார். தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் பெண்களை வீட்டிலேயே முடங்கிவிடாமல் அனைவரும் படியுங்கள் என்று சொன்னார்கள். கலைஞர் அவர்கள் மாவட்டந்தோறும் பள்ளி, கல்லூரிகளை திறந்து நெடும் பயணத்தை குறைத்து அதற்கு உதவினார். நம் தலைவர் தளபதி அவர்கள், காலைச் சிற்றுண்டி வழங்குகிறார். தமிழ்நாட்டு மக்களை படிக்க வைப்பது திராவிட மாடல் ஆட்சி. ஆனால் வட இந்தியாவில் சனாதனம், ஜாதி என்ற போர்வையில், குலத்தொழிலை முன்னிலைப் படுத்துகின்றனர்.

இன்று ராமர் கோவிலை கட்டியதால், தமிழ்நாட்டு மக்கள் உங்களுக்கு வாக்கு செலுத்துவார்கள் என்று பா.ஜ.க.வினர் எண்ணிவிடாதீர்கள், அவர்கள் போய் அங்கு வழிபடுவதால் ஒரு போதும் பா.ஜ.க.வுக்கு வாக்கு செலுத்த மாட்டார்கள்,

நம் தலைவர் யாரைக் கை காட்டுகிறாரோ அவர்தான் நாளைய பிரதமர். எனவே உதயசூரியன் சின்னத்தில் பெருவாரியாக வாக்கு செலுத்தி சிறந்த பிரதமரை தேர்ந்தெடுங்கள்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. பேசினார்.






திருவாரூரில் நடைபெற்ற 'எல்லோருக்கும் எல்லாம்' திராவிட நாயகர் ஆட்சியின் சிறப்பு, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டத்தில் மாநில இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில், ஒன்றியச் செயலாளர் புலிவலம் ஏ.தேவா, நகரச் செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## தமிழ்நாட்டில் 56.34 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து!

### சுகாதாரத்துறை தகவல்

சென்னை, பிப்.5-

தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் 56.34 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது என சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. 57.84 லட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டி ருந்த நிலையில் 98.18% குழந்தைகளுக்கு சொட்டு மருந்து போடப்பட்டுள்ளது.

போலியோ இல்லாத சமுதாயத்தை உருவாக்கும் வகையில் போலியோ சொட்டு மருத்து முகாம் தமிழகம் முழுவதும் நேற்று முன்தினம் நடைபெற்றது. காலை 7 மணிக்கு தொடங்கி முகாமானது மாலை 5 மணி வரை நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்கள் என மொத்தம் 43,051 மையங்களில் 57.84 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் பேரூர் தி.மு.க. சார்பில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி அரூர் பேரூர் 3 வது வார்டில் 'இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்' அரூர் பேரூர் கழக செயலாளர் முல்லை ரவி தலைமையில் பரப்புரை நடந்தது. நிகழ்வில் சூர்யாதனபால், ராஜேந்திரன், கிருஷ்ணகுமார், கலைவாணி, ஐடி விங் கு.தமிழழகன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




திருச்சி தெற்கு மாவட்டம், திருவெறும்பூர் பகுதி கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் பகுதிச் செயலாளர் சிவகுமார் தலைமையில் வி.பி.கருணாகரன், அப்பு (எ) கருணாநிதி ஆகியோர் முன்னிலையில், சோமு குணநிதி வரவேற்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பா.மதிவேந்தன், மாநகரச் செயலாளர் மதிவாணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சேகரன் வண்ணை அரங்கநாதன், மேயர் திவ்யா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். குமார் நன்றி கூறினார்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு வேலூர் சாலையில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அ.தி.மு.க. உள்ளிட்ட மாற்று கட்சியில் இருந்து தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆதிதிராவிடர் நலக்குழு ராஜவேலு ஏற்பாட்டில் வட்டூர் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி, நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மண்டல நகரமைப்பு திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் வட்டூர் தங்கவேல், மாநில வலைதள பொறுப்பாளரும் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினருமான ரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நா.கார்த்திக் தலைமையில்

## கோவை மாநகர் மாவட்டத்தில் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

### கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

கோவை, மார்ச் 5-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்,"இராவிட மாடல் அரசின் சாதனைகள்,"மற்றும் "தமிழ்நாடு அரசின் நிதி நிலை அறிக்கை விளக்கப்" பொதுக்கூட்டத்தில் தி.மு. கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்பி., பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

மார்ச் 1 ஆம் தேதியன்று நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வரும்,"எல்லோருக்கும் எல்லாம்" "திராவிட மாடல் அரசின் சாதனைகள்"மற்றும் "தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கப் " பொதுக் கூட்டம், 3.3.2024, மாலை 5.30 மணியளவில், கோவை ராஜ வீதி தேர்நிலைத் திடலில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் முன்னாள் எம்.எல்.ஏ. தலைமையில், நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தி.மு. கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்பி., பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

பெரிய கடைவீதி பகுதி 1 செயலாளர் மார்க்கெட் எம். மனோகரன் வரவேற்புரையில் நடைபெற்ற, இப்பொதுக்கூட்டத்தில், கோவை மாநகர் மாவட்ட அவைத்தலைவர் கணபதி ராஜ்குமார், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், மாவட்டப் பொருளாளர் எஸ்.எம். பி.முருகன்,தலைமைக் கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து, பி.ஆர்.அருள்மொழி, மு.இரா.செல்வராஜ், அ. தமிழ்மறை, டாக்டர். கோகுல், கே.எம்.நாகராஜ், மணிசந்தர், தமிழ் செல்வன், மீனா ஜெயகுமார், கோவை மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.பி. கண்ணப்பன், வே.பாலசுப்பிரமணியன், ஆனந்தகுமார், ஏர்போர்ட் ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் மா.மகுடபதி, வெ.நா.உதயகுமார், மு.மா.ச.முருகன், ஆர்.மணிகண்டன், ச.கார்த்திகேயன், சு.குப்புசாமி, நோயல் செல்வம்,பகுதிச் செயலாளர்கள் வி.ஐ.பதுருதீன், ப.பசுபதி, கோவை லோகு , அஞ்சுகம் பழனியப்பன், கே.எம்.ரவி, எ.எம்.கிருஷ்ணராஜ், வ.ம. சண்முகசுந்தரம், கே.பாக்கியராஜ், மு.சிவா, ஷேக் அப்துல்லா, துரை.செந்தமிழ் செல்வன், மா.நாகராஜ், இரா.சேரலாதன்,கோவை மாநகராட்சி மண்டலத் தலைவர்கள் மீனாலோகு, இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், தெய்வயானை தமிழ்மறை ,நிலைக் குழுத் தலைவர்கள் பெ.மாரிச் செல்வன், வி.பி.முபசீரா, சாந்தி முருகன், தலைமைக் கழகப் பேச்சாளர் கோவை சம்பத், சிங்கை சௌந்தர், வட்டக்கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிக் கழக, வட்டக்கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள், BLA-2, பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள்,கழக உடன் பிறப்புகள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இறுதியில் 81 வது வட்டக்கழகச் செயலாளர் டவுன் பா.ஆனந்தன் நன்றி கூறினார்.

### எஸ்.பி.கனகராஜ் தலைமை! க.சிவகாமசுந்தரி எம்.எல்.ஏ. என்.மணிராஜ் - கரூர் முரளி பங்கேற்பு!

## கரூரில் அரசின் நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

### சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை! கரூர் கணேசன் வரவேற்புரை!

கரூர், மார்ச் 5-

முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் கரூரில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

கரூர் மாநகர தி.மு.க. சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் கரூர் 80 அடி சாலையில் நடைபெற்றது மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ் தலைமை வகித்தார். வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன் வரவேற்புரை ஆற்றினார்.

தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார்.

கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் க. சிவகாமசுந்தரி, சட்டத் துறை இணைச் செய லாளர் என். மணிராஜ், கொள்கை பரப்புத் துணைச் செயலாளர் கரூர் முரளி, மாவட்டக் கழக நிர்வாகி கள் பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பி.வி. பாரத், காலனி செந்தில், சுப.ராஜகோபால், தொழிலாளர் அணி துணை செயலாளர் பி. விஜயகுமார், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணைமேயர் தாரணி சரவணன், பகுதி செயலாளர்கள் க.சுப்பிரமணியன், கோல்ட் ஸ்பாட் ஆர். எஸ். ராஜா, விஜிஎஸ்.குமார், என். எஸ். ஆறுமுகம், வி. கே.டி. ராஜ் கண்ணு, சிவகாமசுந்தரி, பி.ஏ. குமார், கே.வி. தங்கவேல், எம். பாண்டியன், கே.எஸ். அறிவின்ஸ், எம். நிஷா, அங்கு நா.பசுபதி, ஆர். வெங்கடேஷ், கே.எம்.பாலகிருஷ்ணன், பி சண்முகம், கே.ஆர். சுந்தரராஜன், ஆரோக்கிய ஜெயபால், பழனிவேல், ஜீவரத்தினம், சுப்பிரமணி, அ.க. இளமுருகு, பி.பூபதி,

அணி அமைப்பாளர்கள் வெங்கமேடு சக்திவேல், ஜிம் சிவா, தாச பிரகாஷ், சுப்பிரமணியன், பி. சங்கர், அருணா பொன்னுசாமி, விஅருண், பி.மோகனசுப்பு, எம். பிரின்சி, எம் விக்ரம் கு. வடிவேல், எஸ்.சுதாகர், மண்டல குழு தலைவர் கா.அன்பரசன், முன்னாள் எம்.எல்.ஏ., காமராஜ், இரா.பிரபு, தென்னிலைபாலு, பகுதி கழக நிர்வாகிகள் கே. எம். பெரிய சாமி, செந்தில் சரவணன், ரஞ்சித் குமார், சாந்தி, லட்சுமணன், ராவணன், பிரபாகரன், சண்முகம், கிரி வாசகன், ஓமேகா சுப்பிரமணி, எம். சுப்பிரமணியம், சரவணன், நாகராஜன், கீதாராமச்சந்திரன், ஜெகநாதன், ஆர் மேஷ், கார்த்திகேயன், எஸ். ரமேஷ், எஸ். சரவணன், செந்தில்குமார், ரங்கராஜ், ப.குமார், மோகன் குமார், புவனேஸ்வரி அருள்,

எம். ராஜலிங்கம், வி.காமராஜ், கார்த்திகேயன், பி. கந்தசாமி, அருள்குமார், கௌதம், நாச்சிமுத்து, பரமசிவம், வள்ளி வேல்முருகன், பாலசுப்பிரமணியன், வடிவேல், நாராயணன், ஞானசேகரன், மருதநாயகம், சந்துரு, ரவிச்சந்திரன், கோபிநாத், முத்துலட்சுமி, பாண்டியன், லதா, பாபு குமார் ,சுப்ரமணியன், பாலச்சந்திரன், தங்கராஜ், வெங்கடாசலம், மோகன், வெங்கட்ராமன், ரவிச்சந்திரன், தங்கவேல், கார்த்திகேயன், சந்திரசேகர், தங்கராசு ,சசிகுமார், வட்டக் கழக செயலாளர் குமரேசன், வடிவேல் அரசு, நாகராஜன், நாச்சிமுத்து, தங்கத்துரை, பாலசுப்பிரமணியம், சசிகுமார், ராஜா, சண்முகம், கார்த்திகேயன், பழனிகுமார், இளங்கோவன், தாமோதரன், நந்தகுமார், தங்கவேல், கிருஷ்ணன், பசுவை சக்திவேல், லோகநாதன், மயிலழகன், லாரன்ஸ், ஜாகிர் உசேன், மகேஸ்வரன், சதீஷ் குமார், சக்திவேல், சண்முகசுந்தரம், சாலை ரமேஷ், ரமேஷ் குமார், மணிகண்டன், ஜெயராமன், கார்த்திகேயன், கோவிந்தராஜ், அன்பு ரத்தினம், கிருஷ்ணமூர்த்தி, ராமலிங்கம், சிவக்குமார், செல்வராஜ், ஹரசன், நவாஸ் முருகானந்தம், விக்னேஷ், செந்தில்குமார், விஸ்வநாத், கார்த்திக் குமார், ரமேஷ், அம்பிகாபதி, சுரேஷ்குமார், ராஜேந்திரன், சரவணன், ராமசாமி வினோத், கரூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் சரவணன், மாரியம்மாள், பூங்கோதை, ராஜேஸ்வரி ரஞ்சித் குமார் சரண்யா, தியாகராஜன், பூபதி, தங்கராசு, அருள்மணி, நந்தினி, பிரேமா, வளர்மதி, நிர்மலா தேவி, தேவி, சுகந்தினி, புவனேஸ்வரி, யசோதா, சாந்தி, நிவேதா, பால வித்யா, தெய்வானை, இந்திராணி, வசுமதி, சூரியகலா, சரஸ்வதி, கயல்விழி, மோகன்ராஜ், பழனிச்சாமி, வேலுச்சாமி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் கனகராஜ், அருள் முருகன், கார்த்திகேயன், செல்வம், சரவணன், ராஜா, ஆவின் சக்தி, தர்மலிங்கம், ரவி சாந்தி, வளர்மதி, மனோன்மணி, கனகாம்பாள் உதயராணி, பொன்னுத்தாய், சாந்தி, உத்தரமணி, ரமணி, சோமசுந்தரம், லட்சுமணன், பழனிச்சாமி, தங்க ஆறுமுகம், சிவக்குமார், ரீகன், க.ப. பால சுப்பிரமணியம், தினகரன், இளங்கோவன், ஷரீப், மோகன் குமார், இளைய ராஜா, அசோக் குமார், விக்னேஷ், சபாபதி, விமலார்த்தினி, குமரன் கருணாநிதி, பி.கே.எஸ்.கந்தசாமி, தங்கராஜ், ரவி, இளங்கோவன், கௌசல்யா, சுபாஷ், கிருத்திகா, சந்திரன், தெய்வராசு ,சஞ்சீவி, ரவிக்குமார் கணேசன் பொன் கதிர்வேல், ரீகன், சிவக்குமார், குமார், வேலுச்சாமி, பார்த்திபன், சரவணன் நித்யானந்த் சுபாஷ் கார்த்திக், ராஜாராம் முன்னிலை வகித்தனர். கரூர் மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர். ஜோதி பாசு நன்றியுரை கூறினார்.

### எத்தனை முறை வந்தாலும்

## தமிழ்நாட்டில் மோடியால் காலூன்ற முடியாது!

### அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை, மார்ச் 5-

பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்கு எத்தனை முறை வந்தாலும் எத்தனை குட்டிக்கரணம் அடித்தாலும் காலூன்ற முடியாது என்பது நன்றாக தெரியும். அவரால் எந்த ஒரு தாக்கத்தையும் தமிழ்நாட்டு அரசியலிலோ தமிழ்நாடு மக்களிடத்திலோ ஏற்படுத்த முடியாது என்றும் மோடி எம்.ஜி.ஆரை புகழ்ந்தாலும் ஜெயலலிதாவை புகழ்ந்தாலும் என்ன செய்தாலும் அது ஓட்டு வங்கியாக தமிழ்நாட்டில் மாறாது. பா.ஜ.க.வைப் பொறுத்தவரை எந்த ஓட்டு வங்கியும் இங்கு கிடையாது. யாரைப் புகழ்ந்தாலும் யாரை இழுத்தாலும் யாரைக் கொண்டு சென்றாலும் நிச்சயம் தி.மு.க. கூட்டணி 40க்கு 40 என்ற வெற்றி இலக்கை இந்த தேர்தலில் யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்றும் புதுக்கோட்டை அடுத்த பூசத்துறையில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.

புதுக்கோட்டை அடுத்த பூசத்துறையில் தெற்கு வெள்ளாறு பகுதியில் ஒன்றரை கிலோமீட்டர் தூரம் 25 லட்சம் ரூபாய் மதிப்பில் தூர்வாரும் பணியினை தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:-

பூசத்துறை தெற்கு வெள்ளாற்று பகுதியில் தூர்வாரும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இந்த தூர்வாரும் பணி பெயரளவுக்கு இல்லாமல் உண்மையான தூர்வாரும் பணியாக இருக்கும்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று வந்த ஏழு பேரையும் நீதிமன்ற உத்தரவின் படி தமிழ்நாடு அரசு விடுவித்து விட்டது. அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. விடுவிக்கப்பட்டவர்களின் சிலர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் அவர்களிடம் பாஸ்போர்ட் போன்றவைகள் இல்லை. பாஸ்போர்ட் இல்லாததால் நம்முடைய முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதைத்தவிர வேறு காரணங்கள் எதுவும் இல்லை. அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்ற பேச்சு எழவில்லை. ஆனால் அவர்களுக்கு அந்த நாட்டிலிருந்து அனுமதிச்சீட்டு கிடைக்கவில்லை. அதற்கான முயற்சிகளை ஒன்றிய அரசின் மூலம் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. தமிழ்நாடு அரசு அதனை நேரடியாக எடுக்க முடியாது. ஒன்றிய அரசின் மூலமாக எந்த அளவுக்கு முயற்சிக்கின்றோமோ அந்த அளவிற்கு முயற்சி மேற்கொண்டு வருகின்றோம். மேலும் இங்கு உள்ளவர்களுக்கு என்ன சிகிச்சைகள் தேவையோ அதனையும் வழங்கி வருகின்றோம். வயது மூப்பு போன்றவைகளும் இருக்கின்றது. சாந்தனின் உடலை எடுத்துச் செல்வதற்கு ஒன்றிய அரசு மூலம் அந்த நாட்டின் அனுமதி பெற்று தான் கொண்டு செல்ல முடியும். எங்களைப் பொறுத்தவரை நாங்கள் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் விடுதலை செய்து விட்டோம்.

பிரதமர் மோடியிடம் நாகரிகமான அரசியலை நாங்கள் எதிர்பார்க்கவில்லை, அதனால் கவலைப்பட போவதில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பிரதமர் மோடிக்கு தெரியும் எத்தனை முறை எத்தனை குட்டிக்கரணம் அடித்தாலும் காலூன்ற முடியாது என்பது நன்றாக தெரியும். அதனின் வயிற்றெரிச்சல் தான் தூத்துக்குடியில் நடைபெற்ற மோடியின் வெளிப்பாடு..மனசாட்சியிலுள்ள யாருக்கும் தமிழ்நாட்டின் வரலாற்றை தெரிந்த அனைவருக்கும் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி என்பதை மறக்கவோ மறுக்கவோ முடியாது. இதை மோடி மறுத்தால் அதைப் பற்றி எங்களுக்கு கவலை இல்லை. மக்களுக்கும் நாட்டிற்கும் தெரியும். நிச்சயம் அந்த உண்மை வெளிப்படும். கலைஞர் அவர்களின் புகழையும் அவரது ஆட்சி திறனையோ மறைத்து விட யாராலும் முடியாது. தமிழுக்காகவும் தமிழ் சமுதாயத்திற்காகவும் அவர் பாடுபட்டதை யாரும் மறக்க முடியாது. தமிழ்நாட்டில் இன்றும் அவர் பெயர் சொல்லக் கூடிய திட்டங்கள் தந்திருப்பவர் கலைஞர் தான். இது மோடிக்கு தெரியாமல் போய் இருக்கலாம் இல்லையென்றால் வேண்டுமென்றே அவருக்கு ஞாபக மறதி ஏற்பட்டிருக்கலாம்.

**யாராலும் தடுத்து நிறுத்த முடியாது!**

ஒன்றிய அரசின் திட்டங்களை மாநில அரசு புறக்கணிக்கவில்லை, எந்த பேரில் ஒன்றிய அரசு திட்டத்தை தருகிறதோ அதே பேரில் திட்டத்தை நடத்தி வருகின்றோம். ஆனால் அதில் ஒன்றிய அரசின் பங்களிப்பு குறைவு மாநில அரசின் பங்களிப்பு அதிகம். ஆனால் எங்களது பெயரை அதில் புகுத்தவில்லை. ஒன்றிய அரசு என்ன திட்டம் தருகிறதோ அதை நடத்திக் கொண்டிருக்கின்றோம். ஒன்றிய அரசு எதை வேண்டுமானாலும் பேசிக் கொண்டே போகலாம். நாங்கள் செய்வதை தான் சொல்லிக் கொண்டு உள்ளோம். அவர்கள் எந்த மோடி மஸ்தான் வேலை வேண்டும் என்றாலும் செய்யலாம் அதற்கு நாங்கள் பொறுப்பு கிடையாது.

மோடி எத்தனை முறை தமிழ்நாட்டில் வந்தாலும் குட்டிக்கரணம் அடித்தாலும் எந்த ஒரு தாக்கத்தையும் தமிழ்நாட்டு அரசியலிலோ தமிழ்நாடு மக்களிடத்திலோ ஏற்படுத்த முடியாது. மோடி எம்.ஜி.ஆரை புகழ்ந்தாலும் ஜெயலலிதாவை புகழ்ந்தாலும் என்ன செய்தாலும் அது ஓட்டு வங்கியாக தமிழ்நாட்டில் மாறாது. பா.ஜ.க.வை பொறுத்தவரை எந்த ஓட்டு வங்கியும் இங்கு கிடையாது. யாரைப் புகழ்ந்தாலும் யாரை இழுத்தாலும் யாரை கொண்டு சென்றாலும் நிச்சயம் தி.மு.க. கூட்டணி 40க்கு 40 என்ற வெற்றி இலக்கை இந்த தேர்தலில் யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று தெரிவித்தார்.



ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி, தா.பழூரில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் அறிவிப்பின்படி, ”இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் எனும் தலைப்பில் வீடு வீடாகச் சென்று ஒன்றியக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான க.சொ.க. கண்ணன் வீடு வீடாகச் சென்று துண்டு பிரசுரம் வழங்கினார். இந்நிகழ்வில் இரா.அண்ணாதுரை, என்.ஆர்.ராமதுரை, எஸ்.சூசைராஜ், த.நாகராஜன், க.சாமிதுரை, இந்துமதி நடராஜன், ராஜேந்திரன், எஸ்.ஆர்.தமிழ்ச்செல்வன், கோவி.சீனிவாசன், இரா.சங்கர் ந.கார்த்திகைகுமரன், முனைவர் முருகானந்தம்,க.நளராசன், மருத்துவர் மா.சங்கர், எழிலரசி அர்ச்சுனன், தா.பழூர் கண்ணன் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA–2), வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (BLC), கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சரும் தளபதியார் பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் நகரம் 13 வது வார்டில் 820 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட பொருளாளர் ஆர். வி ஸ்ரீ ராம் வழங்கினார் .இந்நிகழ்ச்சியில் நகர மன்ற துணைத் தலைவர் கவிதா ஸ்ரீ ராம், வார்டு செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் செல்வமணி மற்றும் நகர நிர்வாகிகள் அப்பகுதி மக்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம் மெய்யனூர் பகுதி கழகத்தின் சார்பில் கழக தலைவர். முதல்வர் பிறந்த நாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டத்தில் தலைமை கழகப் பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா கலந்து கொண்டு பேசினார். மற்றும் மாவட்ட அவைத் தலைவர். ஜி.கே. சுபாசு, மேயர். ஆ. ராமச்சந்திரன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.ராஜேந்திரன், கே.டி. மணி, மாநகரச் செயலாளர் பா.ரகுபதி, பொதுக்குழு உறுப்பினர் சா.சுப்பிரமணி,மாவட்ட துணைச்செயலாளர் ஜி. குமரவேல், பகுதிச் செயலாளர் சி.பன்னீர் செல்வம், பாலச்சந்தர், குமார் உட்பட பலர் கலந்து கொண்டு பேசினார்.



புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதியில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாமினை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா துவக்கி வைத்தார். புதுச்சேரி மாநில தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் உத்தமன் ஏற்பாட்டின்பேரில் முத்தியால்பேட்டை தொகுதிகுட்பட்ட சோலை நகர் பகுதியில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. புதுச்சேரி மாநில இளைஞரணி அமைப்பாளர் எல்.சம்பத் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற முகாமை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், கழக அமைப்பாளரு மான இரா. சிவா துவக்கி வைத்து, வீடு வீடாகச் சென்று தமிழகத்தில் நடைபெற்று வரும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக்கூறி உறுப்பினர்களை சேர்த்தார். தொடர்ந்து அப்பகுதி மீனவ மக்களின் குறைகளை கேட்டறிந்தார். இந்நிகழ்ச்சியில் வி.அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் மு. பிரபாகரன், சவுரிராஜன், செந்தில்முருகன், கோபி நாத், டாக்டர் நித்திஷ், ரெமிஎட்வின், தாமரைக்கண்ணன், தமிழ்பிரியன், முகிலன், அகிலன், கிருபாசங்கர், சந்துரு, பஜலுதீன் கலந்து கொண்டனர்.





# நன்றி ! நன்றி !! நன்றி !!!

தலை நிமிர்ந்த தமிழ்நாடு
தனித்துவமான பொன்நாடு

ஆட்சியில் அறம் ! மக்கள் அனைவரும் நலம் !

40 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றி தஞ்சாவூர் மாவட்டம்
திருவோணத்தை தனி தாலுக்காவாக உருவாக்கி தந்த

கழகத் தலைவர், மாண்புமிகு

**தமிழ்நாடு முதல்வர்** அவர்களுக்கும்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர்

**உதயநிதி ஸ்டாலின்** அவர்களுக்கும்

மாண்புமிகு.
**அன்பில் மகேஷ்பொய்யாமொழி** அவர்களுக்கும்
பொறுப்பு அமைச்சர், பள்ளி கல்விதுறை அமைச்சர்

மாண்புமிகு.
**K.K.S.S.R.ராமச்சந்திரன்** அவர்களுக்கும்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை அமைச்சர்

திரு. **துரை.சந்திரசேகரன்** அவர்களுக்கும்
திருவையாறு சட்டமன்ற உறுப்பினர்
தஞ்சை மத்திய மாவட்ட கழக செயலாளர்

திரு. **க.அண்ணாதுரை** அவர்களுக்கும்
பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்
தஞ்சை தெற்கு மாவட்ட கழக செயலாளர்

திரு. **எஸ்.எஸ்.பழநிமாணிக்கம்** அவர்களுக்கும்
தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர்
கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர்

திரு. **என்.அசோக்குமார்** அவர்களுக்கும்
பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர்

ஆகியோர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்...


திரு.**K.T.மகேஷ்கிருஷ்ணசாமி** Ex.MLA.,
தலைமை செயற்குழு உறுப்பினர்
திருவோணம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர்

திரு.**சோம.கண்ணப்பன்**
திருவோணம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர்

திரு.**செல்லம்.சௌந்தர்ராஜன்**
ஒன்றிய பெருந்தலைவர் திருவோணம்

**திருவோணம் வடக்கு ஒன்றியம், தஞ்சை மத்திய மாவட்டம்.**
**திருவோணம் தெற்கு ஒன்றியம், தஞ்சை தெற்கு மாவட்டம்**

## திராவிட இயக்க இதழ்கள் - ‘முல்லைச்சரம்’



‘கடற்கரைக் கவியரங்கம்’ மூலம் பல புதிய கவிஞர்களை தமிழ் உலகத்துக்கு அறிமுகப்படுத்திய கவிஞர் பொன்னடியான் அவர்களால் நடத்தப்படும் இதழ், ‘முல்லைச்சரம்’. பாவேந்தர் பாரதிதாசன் கவிதை மரபைச் சேர்ந்த பொன்னடியான் இந்த இதழை, 1966-ஆம் ஆண்டு தொடங்கினார்.

மரபுக் கவிதைகளுக்காகவே நடத்தப்பட்ட இந்த இதழ், 2016-ஆம் ஆண்டில் தனது பொன்விழாவைக் கொண்டாடியது. தற்போது தனது 57- வது ஆண்டில் நடைபோடுகிறது.

மாத இதழாக வெளிவரும் இதில், சமூகச் சீர்திருத்தம், அரசியல் விழிப்புணர்வு ஆகியவை பற்றிய கருத்துகள் அடங்கிய கவிதைகளை மரபு சார்ந்த எளிமையான யாப்பு முறைகளில் தந்து வாசகர்களையும் தமிழறிஞர்களையும் இன உணர்வாளர்களையும் ஈர்த்து வருகிறது. தொடக்க காலத்தில் இதழின் முகப்பிலேயே கவிதைகள் அச்சிடப்பட்டு வந்தன. இன்று அந்த நடைமுறை மாறியிருக்கிறது.

## :ப்ளாஷ்பேக்



சாதிக் அலி



### மலர்மாலை மரியாதை!

1986-ஆண்டு என்னுடைய 22 வயது முதல் கழகத்தின் உறுப்பினராகப் பதிவு செய்துகொண்டு கழகப் பணியாற்றி வருகிறேன். 1989-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு கரூர் மாவட்டத்துக்கு வருகை தந்தார். அப்போது தலைவருக்கு மலர்மாலை அணிவித்து, வாழ்த்துத் தெரிவித்து அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. ஒன்றிய பிரதிநிதியாகவும், இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும் செயலாற்றி, இன்றைக்கு நகர் மன்ற உறுப்பினராகப் பொறுப்பு வகிக்கிறேன்.

**-அ.சாதிக் அலி, நகர் மன்ற உறுப்பினர், பள்ளப்பட்டி நகராட்சி, கரூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஈரோடு வேலைத் திட்டம்!

1934-ஆம், ஆண்டு செப்டம்பர் 29, 30 ஆகிய இரண்டு நாட்களும் சென்னையில் நீதிக்கட்சி மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் தந்தை பெரியார் ‘ஈரோடு வேலைத் திட்டம்’ என்கிற திட்டத்தினை முன் வைத்தார். கூட்டுறவு வங்கிகளை ஏற்படுத்துதல், உழவர்களுக்கும் வணிகர்களுக்கும் இடையே இடைத்தரகர் சுரண்டலைத் தடுத்தல், தீண்டாமை - மூட நம்பிக்கைகளை சட்டத்தின் மூலம் ஒழித்தல், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக நிதி, இட ஒதுக்கீடு ஆகியனவற்றை அந்தத் திட்டம் நோக்கங்களாகக் கொண்டிருந்தது.

## முதன் முதலில் 1

**ந.வினோத்குமார்**

ஒரு சமூக அமைப்பில், காலம்காலமாகப் பின்பற்றி வரும் விதிமுறைகளை, பழக்க வழக்கங்களை, கொள்கைகளை மக்கள் மொழியில் ‘ஆயிரங்காலத்துப் பயிர்’ என்று சொல்வார்கள். அந்தப் பயிரில் நல்லவை இருந்தால், காலம் கடந்தும் நிற்கும். அல்லவைகள் இருந்தால், அழிந்து போகும். நல்லவை இருக்கின்றபட்சத்தில், காலம் செல்லச் செல்ல, அந்தப் பயிரை இதர சமூகக் கூட்டங்களும் பின்பற்றத் தொடங்கும்.

அவ்வாறு திராவிட இயக்கத்துக்கு என்று சில நடைமுறைகள் உண்டு. அந்த நடைமுறைகள் பலவும் அவை செயல்படுத்தப்படுவதற்கு முன்பு வரையில், வேறு யாராலும் சிந்தித்துக் கூடப் பார்த்திருக்க இயலாது. அந்த மரபுகளை எல்லாம் முதன்முதலாக அறிமுகப்படுத்தியவை திராவிட இயக்கமாகத்தான் இருக்க முடியும். இங்கே திராவிட இயக்கம் என்பது, தந்தை பெரியாரின் திராவிடர் கழகமும், பேரறிஞர் அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகமும்தான்.

அந்த மரபுகள் பலவற்றில் இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகின்றன. காலத்துக்கேற்றபடி அந்த மரபில் சில நவீனங்களும் புகுத்தப்பட்டுள்ளன. தலைமுறைகள் தாண்டி புதிய தலைமைகள் வரும் போது, புதிய மரபுகளும் பிறக்கின்றன.

இவை எல்லாம்தான் நம் அடையாளங்கள். இந்த அடையாளங்கள்தான் நம் தனித்துவம். இந்தியாவில் வேறு எந்தக் கட்சிக்கும் தி.மு.க.விடம் இருப்பது போல வளமான மரபுகள் இருக்குமா என்பது சந்தேகம்தான். அத்தகைய மரபுகளை, வழக்கங்களை இந்தத் தொடரில் நாம் வாரா வாரம் காணலாம்.

‘ஆயிரம் காலத்துப் பயிர்’ என்பது தமிழில் உள்ள ஒரு மரபுத் தொடர். திராவிட இயக்கத்தின் அடையாளங்கள் குறித்துப் பேசும் இதுவும் ஒரு ‘மரபு’ தொடர்தான். வரலாற்றை மீண்டும் மீண்டும் சொல்லித் தருவதும் நம் கழகத்தில் தொடரும் மரபுதான்..!

**திராவிட இயக்கத்தின் அடையாளங்கள் குறித்துப் பேசும் ‘மரபு’ தொடர் இது!**




ஓவியம் : பிரேம் டாவின்ஸி

# வாழையடி வாழையாகும் அடையாளம்!

## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** 1

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**



# ‘கப்பலோட்டிய தமிழன்’ ஆங்கிலத்தில்...

தேசிய இயக்கம், தொழிலாளர் இயக்கம், சைவ சமய மறுமலர்ச்சி இயக்கம், திராவிட இயக்கம், இலக்கியம், பதிப்பு எனப் பரந்துபட்டு இயங்கிய வ.உ.சி பற்றி ஆங்கிலத்தில் இதுவரை ஒரு புத்தகம் கூட வெளியானதில்லை, என்ற செய்தி அதிர்ச்சி அளிக்கக் கூடிய ஒன்று.

இந்திய விடுதலை இயக்க வரலாறு ‘வட இந்திய’ வரலாறாகவே விளங்கி வரும் நிலையில், நம்முடைய வரலாற்றை, கதைகளை, கருத்துகளைச் சர்வதேச அரங்கில் சொல்லும் நோக்கிலும், நமக்கே நம்முடைய வரலாற்றை நினைவுபடுத்திக் கொள்ளும் விதமாகவும் வ.உ.சி குறித்து, சமீபத்தில் ஆங்கிலத்தில் வெளியாகி இருக்கும் முதல் நூல், ‘ஸ்வதேசி ஸ்டீம்: வி.ஓ.சிதம்பரம் பிள்ளை அண்ட் தி பேட்டில் அகைன்ஸ்ட் தி பிரிட்டிஷ் மரிடைம் எம்பயர்’ (*SWADESHI STEAM: V.O. CHIDAMBARAM PILLAI AND THE BATTLE AGAINST THE BRITISH MARITIME EMPIRE*). வரலாற்றாய்வாளர் ஆ.இரா. வேங்கடாசலபதி எழுதி இருக்கிறார்.

விவசாயத்தில் மாத வருமானம் 5 ரூபாய்க்கும் குறைவாகவும், தமிழ்ப் பத்திரிகையில் துணை ஆசிரியர் 30 ரூபாய் மாத சம்பளமும், கல்லூரியில் தமிழ் பண்டிட்டுகள் 50 ரூபாய் மாத சம்பளமும் வாங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில் பிரிட்டிஷாரை எதிர்த்துத் தொடங்கப்படுகிறது ‘சுதேச கப்பல் கம்பெனி’. கப்பல் கம்பெனிக்கு 10 லட்சம் ரூபாயை முதலீடாகத் திரட்டும் லட்சியத்துடன் அந்தக் கம்பெனியின் பங்கு ஒன்றின் விலை 25 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டு 40 ஆயிரம் பங்குகள் விற்பனைக்கு வருகின்றன.

பங்குகளை விற்பதற்காகவே வ.உ.சி பல இடங்களுக்குப் பிரச்சாரப் பயணம் செய்கிறார். ஈரோட்டில் தந்தை பெரியாரும், சேலத்தில் ராஜாஜியும் கூடக் குறிப்பிட்ட அளவில் பங்குகளை வாங்குகிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் நெருக்கடிகளுக்கு இடையே இரண்டு கப்பல்கள் வாங்கப்படுகின்றன. வணிக நோக்கத்துக்காகத் தொடங்கப்பட்டாலும், சுதேச கப்பல் கம்பெனி தேசிய விடுதலை என்ற அரசியல் இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சுதேச கப்பல் கம்பெனி வ.உ.சியின் முயற்சியால் தமிழ்நாட்டில் பெற்றெடுக்கப்பட்ட குழந்தை எனலாம்.


வ.உ.சி உள்ளிட்ட தமிழ் ஆளுமைகளும், கப்பல் கம்பெனியும் நூலாசிரியரின் விவரிப்பில் உயிர்த்தெழுகிறார்கள். அந்தக் காலத்தில், ரூபாயின் மதிப்பில் தொடங்கி, கப்பலில் இருந்த பாகங்கள், பணியாளர்கள், பயணித்த தூரம், நேரம், விற்பனையான பங்கு, பங்கு வாங்கியோர் விவரம், வங்கத்திலும் மும்பையிலும் கொழும்புவிலும் தென் ஆப்பிரிக்காவிலும் சுதேச இயக்கத்துக்கு இருந்த வரவேற்பு, அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் எனத் தன்னுடைய 40 ஆண்டுக் கால ஆய்வின் மூலம் விரிவாகவும் ஆழமாகவும் கோர்வையோடு இந்நூலில் நமக்களிக்கிறார் நூலாசிரியர்.

பெரும் அரசியல் லட்சியத்தோடு, பொருளாதாரப் பின்புலமின்றி, சுதந்திர வேட்கை கொண்ட சுதேசிகளின் உழைப்பின் மூலம் உருவான சுதேச கப்பல் கம்பெனி, நீராவி போல் சுவடே இன்றிக் காற்றில் கலந்த காரணத்தால் ‘SWADESHI STEAM’ என்ற தலைப்பு இந்நூலுக்கு மிகப் பொருத்தமாகவும் உவமை நிரம்பிய ஒன்றாகவும் இருக்கிறது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

408

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131